மலர்-3 இதழ்-67 ஜுன் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# யாகத்தால் மழை வருமா?

## முட்டாள்தனமான கேள்விக்கு அறிவியல் ரீதியான விளக்கம்

# இருதய நோயை போக்கும் வழிமுறை

பெரியவர்களும், சிறுவர்களும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றை வாய் விட்டுத் தினமும் படிக்க வேண்டும்.

வாய்விட்டு படிப்பதால் குரல் உறுப்புகள் பலம் கொள்ளும். அதனால் மார்பு ஆரோக்கியம் பெறும். சுவாசப் பைகளுக்கும் நல்லது. மேற் கண்டவற்றைப் படிக்கும் போது ஏற்படும் மூச்சுக் காற்றின் செயல்பாடுகளால் முதுமையில் இதய நோய், நரம்பு சம்பந்தப்பட் நோய்கள் கூட வரா மல் தடுக்கப்படும்.



நமது முன்னோர்கள் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்றவற்றை காலை மற்றும் மாலை நேரங்களில் வீடுகளில் சத்தமாக படிக்கும் பழக்கம் வைத்திருந்தனர். இதனால்தான் முற்காலத்தில் இருதயநோய் என்ற ஒன்றே இல்லாமல் இருந்தது, மேலும் இவற்றைப் படிக் கும் போது ஏற்படும் மூச் சுப் பயிற்சியால் நீண்ட ஆயுளையும், உடல்நலத்தையும் பெற்று ஆரோக்கியமாக வாழ்ந்தனர்.

## மங்கலம் தரும் குங்குமம்

பெண்கள் வகிடு ஆரம்பத்தில் குங்குமப் போட்டு கட்டாயம் வைக்க வேண்டும். ஸ்ரீமகா லட்சுமியும், அம்பாளும் வகிட்டில்தான் நிரந்தர வாசம் செய்வதால் சுமங்கலிகளுக்கு சகல சவுபாக்கியங்களையும், மங்கலத்தையும் அளிப்பார்கள்.

வெள்ளியன்று குத்து விளக்கிற்கு குங்குமம், சந்தனம் பொட்டிட்டு, பூ சார்த்தி, குங்குமம், புஷ்பம், மஞ்சள் அட்சதையால் குத்து விளக்கு பூஜை செய்வது குடும்ப நலத்திற்கு நல்லது.



## வெற்றிலை பாக்கு

தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யும்போது வெற்றிலை மற்றும் பாக்குகளை இரட்டைப்படை எண்ணிக்கையில் (2,4,6,8,10) வைக்க வேண்டும்.

பூஜைக்கு உபயோகிக் கும்பாக்கு,வெற்றிலை அனைத்து வகை பழங்கள், பூக்கள், தர்ப்பங் கள், ஸ்மித்துகள் போன்றவற்றை பூமியில் நேரடியாக வைக்கக் கூடாது. தட்டுகளில் வைக்கலாம்.



## பிறர் மனம் நொந்து போகும் செயலுக்கு தண்டனை

மனம் நொந்து, இறைவனிடம் வேண்டும் எந்த வேண்டுதலும் இறைவனின் பரிசீலனைக்கு உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும், அதனால் மற்றவர் மனம் நொந்து போகும் அளவிற்கு எந்தச் செயலையும் செய்யாதீர்கள்.

இதற்கு இறைவனால் கொடுக்கப்படும் தண்டனையும் மிகக் கடுமையானதாகவும், குடும்பத்தையே சிதைக்கும் அளவிற்கு அதீத சக்தியுடனுமிருக்கும். அதாவது சாதாரண வெடிக்கும், அனு சக்தி மூலம் வெடிக்கப்படும் வெடிக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்று விபரீதமானதாகவே இருக்கு.

முடிந்த அளவிற்கு மற்றவர் மனம் நோகாமல் நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.





# அறுபத்துமூவருக்கு நேர்ந்த அவலநிலை...

## அதிகாரிகள் இப்படி பயணிப்பார்களா?



இறைவனைவிட, இறை அடியார்களுக்குத்தான் அதிகமாக மதிப்பளிக்க வேண்டும் என்று இறைவனே பல்வேறு புராணங்கள் வாயிலாக கூறியுள்ளார்.

அந்த வகையில் அடியார்களில் இறைவனுக்கு சமமாக கருதப்படும் அறுபத்துமூவருக்கு மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகம் நல்ல மரியாதை செலுத்தியுள்ளது.

மேற்கண்ட படத்தில் அறுபத்து மூவரை கட்டைவண்டியில் பழைய மரச்சாமான்களை ஏற்றுவது போல அடுக்கிச் சென்று வெற்றிகரமாக அறுபத்து மூவர் விழாவை நடத்தியுள்ளது மிகுந்த வருந்தத்தக்க செயலாகும்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருவாய் இல்லையா? ஒரு சப்பரத்திற்கு நான்கு பேர் வீதம் சம்பளம் கொடுக்க முடியாத வறுமையில் உழல்கிறார்களா அதிகாரிகள்? என்று பக்தர்கள் கேள்வி கேட்கும் அளவிற்கு மனத்துயர் அடைந்துள்ளனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஊழியர்கள் அனைவரையும் ஒரே கட்டை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்றால் அவர்கள் அதற்கு சம்மதிப்பார்களா? என்று பக்தர்கள் மனம் நொந்து போய் கேட்கும் அளவிற்கு இந்த காட்சி அரங்கேறியுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை பணத்திற்கு தரும் மதிப்பை, கடவுளுக்கும் தரவேண்டும் என்று இந்து சமய அடியவர்கள் மனம் நொந்து கூறியுள்ளனர்.

இதுபோன்று இந்து கோயில்களில் ஏனோ தானோ என்று பல்வேறு நிகழ்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

உண்மையான பக்தர்களை இதுபோன்ற சமயத்தில் பயன்படுத்திக் கொண்டால் இறைவனுக்கு கிடைக்கவேண்டிய மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

இதற்கென இந்து சமய அறநிலையத்துறை கோவில்களில் சேவை செய்யும் ஆர்வமுள்ளவர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

# எதிரி பயம் போக்கும் வராகி தேவி

சப்தமாதர்களில் ஒரு தேவதையாகப் போற்றப் படுபவள் வாராஹி தேவி. மகாசக்தி வாய்ந்தவள். இவளை வணங்கி ஆராதித்து வழிபட்டு வந்தால், சத்ரு பயம் நீங்கும். அதாவது எதிரிகள் பயம் இருக்காது. எதிரிகளைத் தோல்வியுறச் செய்து எதிர்ப்புகளை தவிடுபொடியாக்குவாள் என்பது ஐதீகம்!



பஞ்சமி தினம் வாராஹியை ஆராதித்து அருள் பெறுவதற்கான அற்புதமான நாள். மாதந்தோறும் 2 பஞ்சமி வரும் இந்த தினத்தில் வாராஹிதேவியை வழிபட்டால், பகையைத் தகர்ப்பாள். பஞ்சமெல்லாம் தீர்த்தருள்வாள்.

இந்த நாளில், அவளுக்கு செந்நிற மலர்கள் அணிவித்து வழிபடுவது மிகுந்த பலனைத் தரும். தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தந்தருள்வாள் வாராஹி தேவி!

பஞ்சமியன்று பின்வரும் 12 பெயர்களை மனதாரப் பிரார்த்தித்தால். எதிர்ப்புகள் இருந்த இடம் தெரியாமல் ஓடும். இன்னல்கள் எங்கேயோ சென்றுவிடும். மனோபலம் பெருகும். மங்கல காரியங்கள் தடையின்றி நிகழும்.

1. பஞ்சமீ
2. தண்டநாதா
3. ஸங்கேதா
4. ஸமயேஸ்வரி
5. ஸமயஸங்கேதா
6. வாராஹி
7. போத்ரிணி
8. சிவா
9. வார்த்தாளி
10. மஹாசேனா
11. ஆக்ஞா சக்ரேஸ்வரி
12. அரிக்னி

வஞ்சனையில் இருந்து மீட்டெடுப்பாள்.

பஞ்சமெல்லாம் போக்கி அருள்வாள். வாராஹிதேவி.

– ராஜ்குமார், மதுரை





# அரிசிமாவு கோலத்தின் ரகசியம்

வாசலில் கோலம் போடும்போது அரிசி மாவினால் போட சொல்லியுள்ளனர் நமது முன்னோர். இவ்வாறு அவர்கள் கூறிய தற்கு மிகப்பெரிய அறிவியல் கருத்தும் புதைந்துள்ளது.

வாசலில் போடப்படும் அரிசிமாவுக் கோலம் எறுப்புகளுக்கு உணவாக அமைந்து, எறும்புகளை காப்பாற்றவே நம் முன்னோர் கூறினார்கள்.

எத்தனையோ உயிரினங்கள் இருக்கும் போது எறும்புக்கு நமது முன்னோர் ஏன் முக்கியத்துவம் கொடுத்தனம் என்ற கேள்விக்கு, சமீபத்திய அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ள கண்டுபிடிப்பின் மகத்தும் நமக்கு எளிதாக விளங்குகிறது.

இன்று உலகையே அச்சுறுத்தி வரும் புவி வெப்பமயமாதலுக்கு எறும்புகள்தான் அற்புதத் தீர்வை செய்து வருவதாக அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழக விஞ் ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

**எறும்புகள் மண்ணில் உள்ள கல்சியம் மக்னீசியம் சார்ந்த மணற்சத்துக்களைச் சிதைக்கின்றனவாம். இதனால் காற்றில் கலந்துள்ள கார்பன் – டை ஆக்சைடு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. இதனால் புவி வெப்பமடைவது குறைந்து குளிர்ச்சியடையும் என்ற அறிவியல் பூர்வமான உண்மைகளை கண்டு பிடித்துள்ளனர் விஞ்ஞானிகள்.**

இந்த உண்மையை அன்றே உணர்ந்த நம் முன்னோர் எறும்புகளை காக்க வேண்டித்தான் விடியற்காலைப் பொழுதில் அரிசிமாவினால் கோலம்போட வேண்டும் என்பதை இந்து மதத்தில் ஒரு எழுதப்படாத விதிமுறையாக வகுத்துவைத்துள்ளனர்.

– ஸ்ரீ பதி





www.aanmeegamalar.com

## தரித்திர யோக நாட்கள்

# இந்த நாட்களை தவிருங்கள்



ஜோதிட ரீதியாக ஒருசில நாட்களை அல்லது ஒருசில நட்சத்திரங்களின் சேர்க்கையுடன் வரும் கிழமைகள், மிகவும் தீயவையாக இருக்கும். அந்த வகையில் ஒருசில நாட்களை தரித்திர நாட்கள் என்றும் ஜோதிடர்கள் கணித்துள்ளனர்.

2019–2020–ஆம் ஆண்டு வரவிருக்கும் அவ்வாறான தரித்திர நாட்களை பற்றி பார்ப்போம்.

தரித்தியயோகத்திற்க்கானவிதி:

- ஞாயிறுக்கிழமையுடன் அனுசம் நட்சத்திரமும்,
- திங்கட்கிழமையுடன் உத்திராடம் நட்சத்திரமும்,
- செவ்வாய் கிழமையுடன் சதயம் நட்சத்திரமும்,
- புதன்கிழமையுடன் அசுவதி நட்சத்திரமும்,
- வியாழக்கிழமையுடன் மிருகசீரிடம் நட்சத்திரமும்,
- வெள்ளிக்கிழமையுடன் ஆயில்யம் நட்சத்திரமும்,
- சனிக்கிழமையுடன் அஸ்தம் நட்சத்திரமும்

இணைந்து வந்தால் தரித்திர யோகம் என்பது சாஸ்திர விதி.

இந்த நாட்களில் வங்கியில் புது கணக்கு தொடங்கவும், மருந்துண்ணவும், தானியங்கள் கொடுக்கவும், விதை விதைக்கவும், பேயி, பிசாசு, ஓட்டவும், ரத்தின ஆபரணங்கள் அணியவும் கூடாது. கடன் வாங்கினால் அதை தீர்க்க முடியாது. கூட்டம் கூட்டினால் அவமானம் நேரும். விருந்துக்கும் ஆகாத நாட்களே என்கிறது நமது பாரம்பரிய வழிகாட்டி நூல்.

எனவே இந்த விகாரி வருடத்தில் வரும் தரித்திரயோக நாட்களை தொகுத்துள்ளது நமது ஆன்மிகமலர்.காம், இதனை அனைவரும் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்.

06.06.2019 அன்று விகாரி வருடம் வைகாசி மாதம் 24 ந் தேதி வெள்ளிக்கிழமையும் ஆயில்யம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று மாலை மணி 5.30 முதல் இரவு முழுதும்.

16.06.2019 அன்று விகாரி வருடம் ஆனி மாதம் 1 ந்தேதி ஞாயிற்றுக்கிழமையும் அனுசம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் காலை10.00 மணி வரையும்.

05.07.2019 அன்று விகாரி வருடம் ஆனி மாதம் 20 ந்தேதி வெள்ளிக்கிழமையும் ஆயில்யம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் நடு இரவு 12.15 வரையும்.

2.08.2019 அன்று விகாரி வருடம் ஆடி மாதம் 17 ந்தேதி வெள்ளிக்கிழமையும் ஆயில்யம் நட்சத்திரமும் இணைக்கிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் காலை மணி 9.30 வரையும்.

21.08.2019 அன்று விகாரி வருடம் ஆவணி மாதம் 4 ந்தேதி புதன்கிழமையும் அசுபதி நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் நடு இரவுமணி 12.45 வரையும்.

9.09.2019 அன்று விகாரி வருடம் ஆவணி மாதம் 23 ந்தேதி திங்கட்கிழமையும் உத்திராடம் நட்சத்திரமும் இணைக்கிறது. இன்று காலை மணி 8.40 முதல் அன்று முழுவதும்

18.10.2019 அன்று விகாரி வருடம் புரட்டாசி மாதம் 01 ந்தேதி புதன்கிழமையும் அசுவினி நட்சத்திரமும் இணைக் கிறது. இன்று காலை மணி 6.45 வரை மட்டும்.

7.10.2019 அன்று விகாரி வருடம் புரட்டாசி மாதம் 20 ந்தேதி திங்கட்கிழமையும் உத்திராடம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை மணி சூரிய உதயம் முதல் மாலை மணி 5.25 வரை.

26.10.2019 அன்று விகாரி வருடம் ஐப்பசி மாதம் 9 ந் தேதி சனிக்கிழமையும் அஸ்தம் நட்சத்திரமும் இணைக்கிறது. இன்று காலை மணி8.30 முதல் அதிகாலை 5.50 வரையும்

12.12.2019 அன்று விகாரி வருடம் கார்த்திகை மாதம் 26 ந்தேதி வியாழக்கிழமையும் மிருகசீரிடம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரையும்

31.12.2019 அன்று விகாரி வருடம் மார்கழி மாதம் 15 ந்தேதி செவ்வாய்கிழமையும் சதயம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் நடுஇரவு மணி 1.30 வரையும்.

09.01.2020 அன்று விகாரி வருடம் மார் கழி மாதம் 24 ந்தேதி வியாழக்கிழமையும் மிருக சீரிடம் நட்சத்திரமும் இணைக்கிறது. அன்று காலை சூரிய உதயம் முதல் மாலை மணி 3.40 வரையும்.

28.01.2020 அன்று விகாரி வருடம் தைமாதம் 14 ந்தேதி செவ்வாய் கிழமையும் சதயம் நட்சத்திரமும் இணைக்கிறது. காலை சூரிய உதயம் முதல் காலை மணி 9.30 வரையும்

16.02.2020 அன்று விகாரி வருடம் மாசி மாதம் 4 ந்தேதி ஞாயிறுக்கிழமையும் அனுசம் நட்சத்திரமும் இணைக்கிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் அதிகாலை மணி 4.50 வரையும்.

15.03.2020 அன்று விளம்பி வருடம் பங்குனி மாதம் 15 ந்தேதி ஞாயிற்றுக்கிழமையும் அனுசம் நட்சத்திரமும் இணைகிறது. இன்று காலை சூரிய உதயம் முதல் காலை மணி11.25 வரையும்.

03.04.2020 அன்று விகாரி வருடம் பங்குனி மாதம் 21 ந்தேதி வெள்ளிக்கிழமையும் ஆயில்யம் நட்சத்திரமும் இணைகிறது இன்று மாலை மணி 6.40 முதல் மறுநாள் காலை வரையும்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# பக்தியில் கர்வம் வேண்டாம்

பஞ்ச பாண்டவர்களின் மனைவி திரௌபதிக்கு பகவான் கண்ணனின் மீது கொண்ட பக்தியில் தன்னை மிஞ்ச உலகில் வேறு ஆளில்லை என்று கர்வம் இருந்தது

இதை கண்ணுற்ற பார்த்தனின் சாரதியான இந்த பார்ததசாரதி பாஞ்சலியின் இந்த கர்வத் தை அகற்ற எண்ணம் கொண்டார் பகவான் கண்ணன் ஒருநாள் காட்டில் இருந்த திரௌபதியை காணவேண்டி வந்தார்

கண்ணனை கண்ட திரௌபதைக்கு மிக்க மகிழ்ச்சி அவள் கண்ணனிடம் அண்ணா நீங்கள் துவாரகையில் இருந்து எப்படி வந்தீர்கள்

தேர் குதிரை பல்லக்கு என எதையும் இக் காட்டில் காணவில்லையே என்றாள்

தங்கையே ஏனோ மனம் உன்னைப் பார்க்கும் ஆவலால் உந்தித் தள்ளியது அதனால் நடந்தே உன்னை காண இங்கே வந்து விட்டேன் என்றார்

அதைக்கேட்டு திரௌபதையின் கண்களில் கண்ணீர் அரும்பியது, அண்ணா என்னை காண உங்கள் பொற்பாதம் நோக நடந்தே வந் தீர்களா அவை எந்தளவுக்கு வலிக்கும், சரி சரி நான் வெந்நீர் போட்டுத் தருகிறேன் நீராடுங்கள் தங்களின் உடல் களைப்பு நீங்கும் நடந்த கால்களுக்கும் இதமாக இருக்கும் என்றாள்.

கண்ணனும் சிரித்து கொண்டே தலையாட் டினார்.

திரௌபதயின் வேண்டுதலை ஏற்று பீமன் தன் பலத்தையெல்லாம் காட்டி ஒரு பெரிய கொப்பரையை வெந்நீர் போட தூக்கி வந்தான் வந்தவன் அருகே ஓடிய ஆற்றில் கொப்பரையை ஒரே அழுத்தாக அழுத்தி தண்ணீர் எடுத்தான்

மூன்று பெரிய பாறைகளை உருட்டி வந்தான அதையே அடுப்பாக்கி கொப்பரையை தூக்கி வைத்தான் ஒரு காய்ந்து போன மரத்தையே ஒடித்து வந்து தீப்பற்ற வைத்தான்

தீ ஜூவாலை விட்டு எரிந்தது ஆனாலும் மதியமாகியும் கொப்பரை தண்ணீர் துளிகூட சுடவில்லை

கண்ணன் தங்கையிடம்

தங்கையே மதியம் ஆகிறது வயிறும் ஆகா ரம் கேட்கிறது அடியேன் தீர்த்தமாட வெந்நீர் என்னாச்சு என கேட்க திரௌ பதி கண்கலங்கியவாறே அண்ணா என்ன சோதனையோ தெரியவில்லை ஏனோ கொப் பரையின் நீர் துளிகூட கொதிக்கவில்லை மாறாக ரொம்பவும் குளிர்ந்திருக்கிறது என்றாள்.

கண்ணன் பாஞ்சாலியின் பக்கத்தில் இருந்த பீமனிடம் "பீமா அந்த கொப்பரை தண்ணீரை கீழே கொட்டு" என்றார்

பீமனும் கண்ணன் ஆணைக்கிணங்கி நீர் நிறைந்த கொப்பரையை கீழே கவிழ்க்க, கொப்ப ரையின் உள்ளிருந்து ஒரு குட்டி தவளை தாவி ஓடியது, கண்ணன் பாஞ்சாலியிடம்

"தாயே தீ ஜுவாலை கொழுந்து விட்டு எரிந் தும் அந்த நீர் குளிர்ச்சியாக இருக்க காரணம் இதுதான், அந்த தவளை சுடுநீரில் சிக்கி மாண்டு விடாமல் இருக்க என்னை பிரார்ததித்துகொண்டே இருந்தது,

பிரார்த்தனையை ஏற்று அதைக் காப்பாற்றவே கொப்பரை நீரை குளிர்ச்சியாக இருக்க செய் தேன் இப்போது புரிகிறதா ஏன் கொப்பரை நீர் கொதிக்கவில்லை" எனஒரு குட்டி தவளையின் சரணாகதி பிரார்த்தனை கூட எனக்கு எவ்வளவு பெரியதென்று பார்த்தாயா என்றார்.

திரௌபதிக்கு நெஞ்சில் சுரீரென உரைத்தது. ஆகா பகவான் கண்ணனிடம் நான் கொண்ட என் பக்தியே உயர்ந்ததென நினைத்தேனே

இப்போது இந்த தவளையின் பக்தி அல்லவா உயர்ந்ததாக காண்பித்து விட்டான்

ஒரு தவளை கண்ணன் மீது கொண்ட பக்தியின் காரணமாக கொழுந்து விட்டு எரிந்த தீயிலிருந்து உயிர் பிழைத்து ஓடுகிறது அதன் பக்தியை மிஞ்சி என் பக்தி எப்படி உயர்ந்ததாக முடியும் என்று எண்ணி கண்ணீர் வடித்தாள்



பகவான் ஒருவரின் உள்ளத் தின் பக்தியை தான் பார்க் கிறானே தவிர அவன் அணியும் பஞ்சகச்சத்தையோ துவாதச புண்டரத்தையோ அத்யாபக கோஷ்டியில் மற்றவர்களை விட சப்தமாக சேவிப்பதையோ இல்லத்தில் மூன்றுமணிநேரம் திருவாராதனம் செய்வதையோ அவன் படைக்கும் பட்டு பீதாம்பரத்தையோ அக்கார அடிசலையோ ஜீராண்ணத்தையோ அவன் நமக்கு எவ்வளவு அழகாக அலங்காரங்கள் திருமஞ் சனம் கண்டருள செய்வித்தான் என எதையும் பார்ப்பதில்லை அந்த நேரங்களில் அவன் உள்ளத்தில் தன் மீது பக்தி எவ்வாறு உள்ளது என்பதை மட்டுமே தான் பார்ப்பார் அதே நேரம் நான் பகவானுக்கு அதை செய்தேன் நான் மட்டும் இல்லையென்றால் என்ற கர்வமும் கூடாது பக்திக்கு துளி கூட கர்வமும் கூடாது என்பது புரிகிறதல்லவா,

யாருடைய பக்தியையும் ஆடைகளை பார்த்தோ உருவத்தை பார்த்தோ ஊர்த்தவ புண்டரங்களை பார்த்தோ வேதங்களை சேவிக்கும் சப்தத்தை வைத்தோ சமர்பிக்கும் உடைகளை பட்சணங்களை உணவு களை பார்த்தோ எடைபோடுவதில்லை அவன் பார்பது உள் ளத்தில் அவன் மீது நமக்கு உள்ள பக்தியை மட்டுமே.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# ஆஞ்சநேயர் திருமணம்




கடுமையான பிரம்மசரியத்தை மேற்கொண்டவர்தான் ஆஞ்சநேயர்.

ஸ்ரீராமரையும் ராம சேவையையும் மட்டுமே எப்போதும் தன் இதயத்தில் இருத்தியவர். இப்படித்தான் ஆஞ்சநேயரைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், ஆஞ்சநேயருக்கு ஒரு மனைவியும் மகரத்வஜன் என்ற ஒரு மகனும் இருந்ததாக வால்மீகி ராமாயணத்தில் வரும் மயில்ராவணன் கதை, கம்போடியா மற்றும் தாய்லாந்து நாட்டு ராமாயணங்கள் கூறுகின்றன.

அனுமாரைப் போன்றே அவரது மகனும் பராக்கிரமசாலியாக இருந்தார் என்பதும், அந்த மகன் `மச்சவல்லபன்', `சுறவக்கொடியோன்' என்று தமிழிலும், `மகரத்வஜன்' என்று சமஸ்கிருதத்திலும் அழைக்கப்படுகிறார்.

மகரத்வஜன், ஆஞ்சநேயருக்கு மகனாகத் தோன்றியது எப்படி என்பது பற்றிப் பார்ப்போம்.

ராம லக்ஷ்மணர்களைக் காப்பதற்காக அனுமார் சஞ்சீவி மலையைத் தூக்கிக்கொண்டு பறந்தபோது, அவரது உடலில் பெருக்கெடுத்த வியர்வை கடலில் விழுந்தது. அப்போது மீன் வடிவில் கடலில் நீந்திக்கொண்டிருந்த தேவகன்னி ஒருத்தி, அந்த வியர்வையை விழுங்கினாள் என்றும், இலங்கையைத் தீக்கிரையாக்கிவிட்டு, பற்றியெரிந்த வாலை அணைப்பதற்காக அனுமார் கடலில் இறங்கியபோது அவரில் இருந்து வழிந்த வியர்வையை ஒரு தேவமச்சக்கன்னி விழுங்கினாள் என்றும் இருவிதமாகக் கூறப்படுகிறது. வியர்வையை உண்ட தேவகன்னிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் கன்னிகை,

அதாவது அனுமாரின் மனைவி, `சுவர்ச்சலா' என்றும் `சுசீலா' என்றும் பெயர் கொண்டவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

அனுமாரின் மகன்தான் மகரத்வஜன். ஆனால்,தனக்கு மனைவி இருப்பதோ மகன் இருப்பதோகூட ஆஞ்சநேயருக்கு பிற்காலத்தில்தான் தெரியவந்தது.

ஒரு பக்கம் கதை இப்படி இருக்க!!

நம்மூரில் அவருக்கு வேறு வகையில் அதிகாரப்பூர்வாக திருமணம் நடத்தப்படுகிறது. வியாசரின் தந்தை மகரிஷி பராசரர் எழுதிய, "பராசரர் ஸ்ம்கிதா" என்ற அனுமனின் முழு வாழ்க்கை பதிவில், அனுமனின் குருவான சூரிய பகவான் கல்வி, இசை, கலை, வேதங்கள் என சகல வியாகரங்களையும் கற்று தருகிறார். ஒரு மணாளனாக (கணவனாக) இல்லாது நவ வியாகரங்களை முழுவது மாய் பயில இயலாது.

இதனால் சூரியன் தனது கிரணங்களால் சுவர்ச்சலாதேவி என்ற பெண்ணை தன் மகளாக உருவாக்கினார். அனுமனது பிரம்மசரியம் கெடாமல் அவருக்கு தன் மகளை திருமணம் செய்து வைத்து நவ வியாகரங்களையும் பயிற்றுவிக்கிறார் மாமனார். இதனால் அனுமன் “நவவியாகரண பண்டிதன்” எனவும் அழைக்கப்படுகிறார்.

பிரம்மச்சாரி என்று பெரும்பாலோர் போற்றும் அனுமனின் திருமணக்கோலத்தை, சென்னை செங்கல்பட்டு சாலையில், கூடுவாஞ்சேரி அருகில் தைலாவரம் என்னும் ஊரில் "ஸ்ரீசுவர்ச்சலா ஆஞ்சனேயர்" கோவிலில் தரிசிக்கலாம்.

தொடர்புகளுக்கு
போன்: 9444294783

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# தண்ணீருக்குள் பெருமாள்

## அவசியம் தரிசியுங்கள்

சின்ன காஞ்சிபுரத்தில் பழமை வாய்ந்த வரதராஜப் பெருமாள் கோவிலில் உள்ள ஆனந்தபுஷ்கரினி (அமிர்தசரஸ்) என்ற குளத்தில் இருந்து வருகிற ஜூலைமாதம் அத்திவரதர் வெளியே வந்து நாற்பத்து எட்டு 48 நாட்கள் வசந்த மண்டபத்தில் அருள்புரிகிறார்

நின்ற கோலத்தில் இருபத்தி நான்கு 24 நாட்கள்

சயன கோலத்தில் இருபத்தி நான்கு 24 நாட்கள்

அனைவரும் சென்று அருள் பெறுவோம்

அடுத்த தரிசனம் 2059ல் நாற்பது ஆண்டுகள் பின் கிடைக்கும்.

40–ஆண்டு ஒரு முறை மட்டுமே சேவிக்க முடியும். ஏனெனில் அவர் இருப்பதோ, நம் கண்ணனுக்கு புலபடாத தண்ணிருக்கு அடியில்.

கோவிலின் நூற்றுக்கால் மண்டபத்தின் வடக்கே உள்ள இரண்டு குளங்களில் தென்திசையில் உள்ள நீராழி மண்டபத்தின் கீழே நீருக்கு அடியில் உள்ள ஒரு மண்டபத்தில் தன்னை மறைத்துக்கொண்டு இருக்கிறார் அத்தி வரத பெருமாள்.

இந்த குளத்தின் நீர் என்றும் வற்றுவதில்லை அதனால் பெருமாள் யார் கண்ணுக்கும் புலப்பட மாட்டார். பெருமாளின் தாருமயமான திருமேனி மரத்தினால் செய்யப்பட்டது.

மிகப்பெரிய அத்தி மரத்தால் வடித்து, பிரம்ம தேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிரம்மனின் யாகத் தீயினின்று தோன்றியதால் சிறிது பின்னப்பட்டுவிட்டார். எனவே அசரீரி மூலம் தன்னை ஆனந்தத் தீர்த்தத்தில் விட்டுவிட்டு பழைய சீவரத்திலிருந்து சிலையை காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு கூறினார்.

பெருமாள் பெரும் உஷ்ணத்தைத் தணிக்கவே தெப்பக் குளத்தில் வாசம் செய்கிறாராம்.





ஆன்மிகமலர் மெயில் புக்



அப்படியே இவரை வெள்ளித் தகடு பதித்த பெட்டியில் சயனக் கோலத்தில் வைத்து ஆனந்த புஷ்கரணி மண்டபத்தின் நடுவே நீரில் வைத்து விட்டனர்.

பழைய சீவர பெருமாளை தேவராஜப் பெருமாள் என பிரதிஷ்டை செய்து விட்டனர்.

ஆனந்த தீர்த்தம் என்றும் வற்றாது. எனவே நீரை இறைத்து விட்டு ஆதி அத்தி வரதரை வெளியே கொண்டு வருவார்கள். இந்நிகழ்வு 40 ஆண்டுக்கொருமுறை மட்டுமே நடைபெறும்.

வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் சயன கோலமாக, அமிர்தசரஸ் என்னும் அந்த குளத்தில் மூழ்கியிருக்கும் பெருமாள், 40 வருடங்களுக்கு ஒரு முறை, மேலே வந்து, சயன மற்றும் நின்ற கோலமாக எழுந்தருளி இருப்பார்.

வசந்த மண்டபத்தில் 48 நாட்கள் பக்தர்களுக்கு சேவை சாதிப்பார்.

இந்த இரண்டு கோலத்திலும் பெருமாளை தரிசிப்பது மிகச் சிறப்பாகும், குடும்பத்துடன் இந்த வைபவத்தில் கலந்து கொண்டால் அத்தி வரதரின் ஆசி கிடைக்கும்.

நின்ற கோலத்திலும், சயனக் கோலத்திலும் தரிசனம் தந்தபின் மீண்டும் அனந்தத் தீர்த்தத்தில் சயனித்து விடுவார்.



பக்தர்கள் மிகவும் தொன்மையான இந்த அத்தி வரதரை, உற்சவ விழா வழிபாட்டோடு கண் குளிர தரிசிக்கலாம்.

பிறகு மீண்டும் வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் வைத்து குளத்தில் மூழ்கடிக்கப் பட்டுவிடுவார்.

1939 ஆண்டு சேவை சாதித்தார்..

1979 ஆண்டு சேவை சாதித்தார்..

அடுத்து 17.07.2019ஆண்டு சேவை சாதிக்க உள்ளார்

திருக்கோயில் பற்றிய குறிப்பு:

மூலவர்: வரதராஜர் (தேவராஜர்)

தாயார்: பெருந்தேவி

தல விருட்சம்: அரசமரம்

தீர்த்தம்: அனந்த சரஸ்

பழமை: 1000–2000 வருடங்களுக்கு முன்

புராண பெயர்: அத்திகிரி, திருக்கச்சி

ஊர்: காஞ்சிபுரம்

உற்சவருக்கு, “அழைத்து வாழ வைத்த பெருமாள்’ என்ற வித்தியாசமான பெயர் இருக்கிறது.

கீதையில் கிருஷ்ண பகவான், தனது வடிவமாகக் குறிப்பிட்ட அரச மரமே இத்தலத்தின் விருட்சம். மரத்தின் எதிரே கரியமாணிக்க வரதர் சன்னதி உள்ளது. புத்திரதோஷம் உள்ளவர்கள் அமாவாசையுடன், திங்கள்கிழமை சேர்ந்த நாளில் மரத்தையும், சன்னதியையும் சுற்றிவந்து வழிபடுகிறார்கள்.

வைகாசி பிரம்மோற்ஸவம், ஆனி சுவாதி மற்றும் ஆடி கஜேந்திர மோட்ச நாட்களில் சுவாமி கருடசேவை காண்கிறார்.

ராமானுஜருக்காக கண்களை இழந்த கூரத்தாழ்வார், பார்வை பெற்ற தலம் என்பதால், கண் நோய் நீங்க இங்கு வேண்டிக்கொள்கின்றனர்.

காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங்களைக் குறிக்கும் விதமாக மூலஸ்தான படிகள், மதிலில் பதிக்கப்பட்ட கற்கள், தீர்த்தக்கரை படிகள் அமைந்துள்ளன.

நன்றி: ராமஜெயம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ஆன்மிகமலர் மெயில் புக்

# யாகம் செய்தால் மழை வருமா?

## முட்டாள்தனமான கேள்விக்கு அறிவியல் ரீதியான விளக்கங்கள்

சமீபத்தில் யாகம் பற்றி பல்வேறு தேவையற்ற கருத்துக்களை, கேலியும் கிண்டலுமாக செய்தியாக பரப்பப்படுகின்றது. ஆனால் நமது முன்னோர் செய்துள்ள அனைத்து விஷயங்களும் மிகவும் ஆழமான கருத்துப் பொதிந்ததாகவே உள்ளது.

மனித பிறப்பு முதல் இறப்பு வரை, அர்த்த முள்ள பல்வேறு சடங்கு சம்பிரதாயங்களை வகுத்து வைத்துள்ளனர் நம் முன்னோர். இதை பல காலங்களில் பல்வேறு பிரிவினரால் சிதைக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே, அந்த வகையில் தற்போது யாகம், வேத மந்திரம் போன்றவற்றை சிதைக்க ஒருசில மூடர்கூட்டம் முனைப்பு காட்டி வருவது வேதனையான செய்தி.

எதையும் ஆராயாமல், அன்னிய முதலீட்டில் வாழும் இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணி, இந்து மதத்திற்கு எதிரான கருத்தை சொல்லி இந்துக்களிடம் பிளவை ஏற்படுத்தவேண்டும் என்பது மட்டுமே.

இக்கூட்டம் சினிமா துறை முதற்கொண்டு, அரசுத்துறை, அரசியல்துறை போன்றவற்றையும் தற்போது ஆக்கிரமித்து வருகிறது. சமீபத்தில் மழை வேண்டி அனைத்து கோயில்களிலும் சிறப்பு யாக, மந்திர வேள்விகளை நடத்த தமிழ்நாடு அறநிலையத்துறை அறிவித்திருந்ததை பெரும்பாலும் எதிர்த்தது இது போன்ற மூடர் கூட்டம்தான்.

அவர்களின் கேள்வியே யாகம் செய்தால் மழை வருமா? என்பது மட்டுமே, இந்த அன்னிய முதலீட்டில் வாழும் கூட்டத்திற்கு, பதிலாக நாம் சிவவற்றை தொகுத்துள்ளோம். அவற்றைப் பார்ப்போம்.

இந்து சமயத்தில் பல்வேறு கருத்துக்கள் ஆழப்பதிந்துள்ளது, ஆனால் அந்தக் கருத்துக் களை சரியாக புரிந்து கொள்ளும் அளவிற்கு இந்துக்களிடம் தெளிவற்றுள்ளனர்.

உலக அளவில் ஆன்மிகம், அறிவியல், ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்பில் சிறந்து யானையைப் போன்று அபரிமிதமான பலம் கொண்டிருக்கும் நாம், யானை ஒரு சிறு சங்கிலிக்கு கட்டுண்டு கிடப்பது போன்று நம் பலம் தெரியாமல் தலையாட்டியவாறே இருப்பது தான் நமது பலவீனமே...

பண்டைய காலந்தொட்டு யாகங்கள், யக்ஞங் கள், பூசைகள் போன்றவற்றை ஒரு நல்ல காரியத்தை முன்னிட்டு நமது முன்னோர்கள் செய்து வந்தனர். வியாதி தீர, எம பயம் அகல, சத்ருக்களின் உபாதைகளிலிருந்து விடுபட என, பற்பல காரியங்களை முன்னிட்டு, பரிகாரங்கள் என பெயர் சூட்டி ஹோமங்கள், யாகங்கள் போன்றவை நடைபெற்றன. இவற்றினால் என்ன பலன் என்பதனை விஞ்ஞான பூர்வமாக அறிவுப்பூர்வமாக ஆய்வோம்.



யாகம் செய்தால் மழை வருமா என்ற கூட்டத்திற்கு, யாகம் செய்தால் விஷவாயு தாக்குதலில் இருந்தே தப்பிக்கலாம் என்பது விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கப்பட்ட உண்மை.

டிசம்பர் 3, 1984 அன்று மத்தியப் பிரதேசம் போபால் என்ற ஊரில் நடந்த விஷ வாயு தாக்கத்தினால் எண்ணற்ற மனித, விலங்குகள் உயிர் இழந்ததும், கூன், குருடு, செவிடு என உறுப்புக்களை இழந்து வாடியதும் உலகம் அறிந்த உண்மை. யூனியன் கார்பைடு என்ற ஒரு அந்நிய முதலீட்டாளரின் ஆலையில் ஏற்பட்ட விஷ வாயுக் கழிவு பற்பல மக்களின் உயிரை பறித்தது.

பத்து கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்களில் உள்ள ஜீவராசிகள் எல்லாம் பாதிக்கப்பட இந்த ஆலையின் மிக அருகாமையில், சுமார் ஒரு கி.மீ. தொலைவுக்குள் உள்ள திரு. சோகன் லால், எஸ். குஷ்வாஹா மற்றும் எம்.எல். ரத்தோர் என்பவரின் குடும்பம் மட்டும் தப்பிப் பிழைத்தது. இதுபற்றி அன்றைய ஆராய்ச்சியாளர்கள் மிகப்பெரிய வியப்பு ஏற்பட்டது, இது எப்படி சாத்தியம் என்று ஆராய்ந்தனர்.

அவர்களின் ஆராய்ச்சியின் முடிவுப்படி, அன்று அவர்கள் அக்கினி ஹோத்திரம் மற்றும் மகா சுதர்சன யாகம் செய்து கொண்டிருந்தனர். இந்த யாகத்தில் இருந்து வெளிவந்த புகை காற்றில் கலந்திருந்ததால், விஷவாயுக்கள் அவர்களது வீட்டை தாக்காமல் தடுத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

படம் 1


Delhi - 19.5.85

# 'Agnihotra' as antidote for MIC gas in Bhopal

THOUGHT WAVES

Vedic Yagnas for combating pollution in the West

இச்செய்தி அன் றைக்கு உலக அளவில் விவாதப் பொருளாக இருந்தது. இதுகுறித்து மே மாதம் 4ந் தேதி 1985ம் தேதியிட்ட The Hindu நாளிதழில், "Vedic Way to beat pollution" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியை (படம் 1ல்) காண்க.

ஆக ஹோமம் என்பது மக்களின் மேன்மைக்காகவும் முன்னேற்றத்திற்கான காரணத்திற்காகவும் நமது முன்னோர்கள் சொல்லிச் சென்ற அற்புதமான நிகழ்வாகும்.

மேலும் ஒருசில யாகங்கள் செய்தால், ஒருசில பலன் கிடைக்கும் என்பதை தமிழ் புலவர்களே பல்வேறு பாடல்களின் வாயிலாக விளக்கிக் கூறியுள்ளனர்.

அவர்கள் கூறியுள்ள பாடல்களையும் அதன் விளக்கத்துடன் எந்த யாகம் என்ன பலன் தரும் என்பதைப் பற்றி தெளிவாக காண்போம்.

## புத்திர காமேஷ்டி யாகம்

இராமாயணம் இதிகாசத்தில், தசரதச் சக்கரவர்த்தி தனக்கு வம்ச விருத்தி வேண்டி ஒரு யாகத்தைச் செய்தார். அதற்கு "புத்திர காமேஷ்டி யாகம்" என்று பெயர். சூதக முனிவர், தமது நாடியில், இந்த யாகத்தைப் பற்றி கூறியுள்ளார்.

"சாபந்தன்னால் வம்சம் கருகி நிற்க
கண்டீராயின் புத்திர காமேட்டியாகஞ்
செய்தே யன்னதானஞ் செய்து பின் தம்பதியர்
கூட வம்சம் விருத்தியுண்டாம் த்யாதே"

என்றார். இதனைத் திருமூலர் விஞ்ஞான ரீதியில் விளக்குகின்றார்.

"அவில் பாதமீய உருவாக மொலியது
உயிரணுக் கொண்டு விந்துவொளி
யாமது முழமிரண்டுளுறை மங்கை கரு
அறை புகுந்து நஞ்சகற்றி கரு தங்க
வேதுவானதான விந்தை புரிய குறையிலை"

அக்கினியில் இடப்படும் அவிற்பாதமெனும் பட்டு, தேன் கனிகள் போன்றவை எரிகையில் வெளித்தோன்றும் புகை மண்டலத்திலிருந்து Molecular collision தன்னால் வெளித்தள்ளப்படும் cosmic ray என்னும் விந்தொளி, கருப்பையை எட்டி அதனை சந்தித்து கரு தங்க வைக்கும் வண்ணம் செய்கிறது. ஹோம குண்டத்திலிருந்து ஒரு கஜ தூரத்தில் குழந்தை வேண்டும் பெண் அமர வேண்டும் என்று தெரிகின்றது.

## ஆயுஷ்மான் ஹோமம்

"ஆயுஷ்மான் ஹோமம்" என்ற இந்த யாகத்தினை குழந்தை பிறந்து ஒன்பது மாதங்களுக்குள் செய்ய வேண்டுவது. இதனை செய்யும் முறை நாடியில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஆயுஸ்மான் ஹோமம் செய்கையில் குழந்தையை, இருபத்தேழு அடி தூரத்தில் இந்த ஹோம குண்டம் துலங்கும் தலத்திலிருந்து எட்டக் கிடத்தி இருக்க வேண்டும். குழந்தை சிவப்பு, வெண்பட்டினால் அலங்கரிக்கப்பட பலன் பூரணம் என்கின்றார் குரங்கனிச் சித்தர்.

"மண்ணில் விழுஞ் சிசு பாலதுவேதா
யினு மூவாறு முழமடுத்தே கிடத்தி
பால் செம்மை வர்ணந்தீட்டிய
வத்திரத்து வாடையணிவித்தே சம்பத்து
யாகமாற்ற வருணனருளால் மாயோன்
மணியளி யுட்கலந்தே சீரொடு
சிறப்புஞ்சேர சிசு நீடு வாழ்வாமே"

என்னும் இப்பாடல், பிறந்த குழந்தையின் ஆரோக்யம் மிகவும் சிறப்பொடு விளங்கும். ஆபத்து அதிகமான பிணிகளிலிருந்து குழந்தை விடுதலை பெறும். இதற்கு ஏதுவான மாயோன்மணி யளி எனும் Lazer கதிர் குழந்தையின் உடலில் உள்ள நாளங்கள், சுரப்பிகள் போன்றவற்றை உறுதி ஆக்கி, நோயின்றி குழந்தை நீடித்த ஆயுள் பெறும் என்பதாம்.

## மகா மிருத்ஞ்ஞ ஹோமம்

இது நீண்ட ஆயுளுடன், எந்தவிதமான விபத்துக்களும் ஏற்படாதபடி ஒருவன் உயிர் வாழ பெரியோர்கள் சொன்ன ஹோமப் பூசை ஆகும். இதனை முறைப்படி செய்தால் விபத்துக்கள் என்பது வாழுங்காலத்தில் தவிர்க்கவும், அகால மரணங்கள் நேராது காக்கவும் அடித்தளமாக அமையும் என்கின்றனர் சித்தர்கள். பதஞ்சலி என்னும் சித்தர் தமது பாடலில்,

"மேலான வாழ்வும் வாழலாகுமே சிவனாருக்
கமைந்த காலாக்கினி பூசா வழியே
வண்ணமிட்ட மட்ட பட்டோடு
பஞ்சதானிய வுலோகத்துடனே சாமமிரண்டு
கடைதனிலாற்றிடவே சென்மத்தும்
தேகமது வச்சிரமாக காயமது பிணியின்றி
நீடுவாழ மய்க்கதிராலாமிது சாத்தியமே"

என்று பேசுகின்றார். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் கலந்தது இந்த பாடலின் வரிகள். காலாக்கினி என்பது மகாமிருத்த்ஞ்ஞ ஹோமம் ஆகும். எட்டு வேறு வேறு வர்ணங்களில் ஆன வஸ்திரங்களை ஹோமத்தில் சேர்க்க வேண்டும். ஐந்து விதமான உலோகங்களுடன் ஐந்து வேறு தான்யங்களையும் தீயில் ஆகுதி செய்திடவேணும். ஐந்து சாமங்கள் என்பது ஒரு பகல், பகல் காலத்து இந்த ஹோமம் செய்தால், கடைசி இரண்டு சாமங்களில் இந்த பூரணாஹுதி நடைபெற வேணும். Black radiation என்ற ஒருவித நுண்ணிய கதிர்கள் இந்த ஹோமத்தின் வாயிலாக எழுகின்றன. இது நாம் யாருக்காக இந்த ஹோமத்தைச் செய்கிறோமோ, யார் இந்த ஹோமத்தின் எஜமானோ அவனைச் சென்று இக்கதிர்கள் தாக்க, மூளையில் உள்ள நுண்ணிய அணுக்கள் சற்று துடிப்பை சீரிய முறையில் அடைந்து எண்ணற்ற நுணுக்கங்களைக் கற்றுத் தேறுகின்றன. எனவே விபத்துக்களிலிருந்து தப்பும் வழியை அனிச்சையாகவே அறிந்து செயல்பட, பாதுகாப்பு பலமாகி நிற்க நோய்கள் எளிதில் தாக்காது. தாக்கிய சிறுபீடைகள் திரேகத்தை வாட்டாது விலகிப் போகின்றன என்கிறார் சித்தர்.

## தந்வந்த்ரி ஹோமம்

"ஆயுளை நீடித்து அருளைக்கூட்டும்
பாரு ஆவலை யணைபோட்டு
உண்டியை சுருக்கி நாட்டத்தை
யடைக்குமிப் பூசை தமையாற்று
வார் வாத பித்த சுரத்திருந்து விடு
படவார் திண்ணமே"

என்கிறது சிவவாக்கியர் பாடல். ஒரு மனிதனின் வாழ்நாளை அதிகரிக்கச் செய்யும் யாகம் இது. அதுமட்டுமல்லாமல் இறைவனின் அனுக்கிரகத்தை, அருளைக் கூட்டித் தரும். மனிதனின் மனதைக் கட்டுக்குள் அடக்கி, ஆசைக்கு அணை போடும் ஹோமம் இது. அதிகமாக உண்ணாது உடலுக்கு ஏற்ற தேவையான உணவை மட்டும் உண்ண வைக்கும் அதீத பூசை இது. முறையாக இப்பூசை புரிவார்க்கு மூளைக் கோளாறு, மூளை

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

நரம்பினால் ஏற்படும் கோளாறு போன்ற கபால பீடை விலகும். வாத சம்பந்தப்பட்ட பீடை அகலும் என்ற பொருள்பட நிற்கும் செய்யுள் இது.

## சண்டி ஹோமம்

"மேன்மைகள் பெற்றே மேலோனாய்
நிற்கலாங் கண்டீர் இந்திர சந்திரா
யனுமடங்க கண்டோமே; கலை
யடு ஞான விருத்தியமடங்க விதுவே
வித்தாமென கொங்கணயாமுஞ் சத்தியஞ்
செய்வோமே"

கொங்கண சித்தரின் இப்பாடல் பொருள் புதைந்தது. ஒரு மனிதன் மிக உயர்ந்த நிலை அடையவும். கீர்த்தி மிகுந்து பெறவும், பெரிய பெரிய பதவிகளை எட்டவும் இந்த சண்டி ஹோமம் செய்யவேணும். அசுவமேத யாகத்திற்கு இணை இது என்பர் சித்தர். இந்திரன், சந்திரன், பிரமன் உள்ளிட்ட தேவர்களின் அருள் சேரும் என்றும், ஞானம், கல்வி, தேர்ச்சி கிடைக்கும் என்றும் பொருள் கொண்ட இந்தப் பாடலினால், இந்த ஹோமத்தின் மேன்மையை அறியலாம்.

## கிருத்திய பரித்திரான ஹோமம்

இதை யக்ஞமாகவும், யாகமாகவும் செய்யலாம். ஏவல், பில்லி, சூனியம், வசியம், மோனம், தம்பனம் போன்ற கொடிய தாக்கத்திலிருந்து விடுபட இந்த ஹோமம் வழிவகுக்கின்றது. இதனை அத்திரி முனிவர் சுகருக்கு உணர்த்துவதான பாடலிது.

"சுகனே யுமக்கோதுதுங் கேளீர்
ஏவலுஞ் சூனிய வாதமொடு
வசிய வித்தை தம்மாலவதி யுறுவோர்
தாமே தக்க உபாசனா தேவதை நிறுத்தி
க்ருத்திய பரிதராந பூசைபுரிய விமோசன
மாம் பித்தமொடு பெரும் பீடை சரியாக
விரயமே விலகி தோலால் கொண்ட தொழு
நோயுமகல விமோசனமான வாழ்வு வாழலாமே"

என்ற பாடல் நமக்கு இன்பமயமான வாழ்வு வாழும் வழியை காற்றுகின்றது.

"கொண்டதோர் துருக்கை கணபதி காய்த்ரி
குபேரபுரி நாத திலமங்கள சமசுகார
நவநாயக புந்நியகவச்சந சுதர்சந
சந்தான கோ பாலக ருத்திரவஸ்து
வித்திய விசுவசாந்தி வ்ரச வெந ஓராயிரத்
தட்ட ஹோமமிருக்க தக்க மகாவை தகவே
வைத்தாற்ற இயலாதேது இப் புவியிலியம்பு"

என்கிறார் பரவாசுதேவ பாதரெனுஞ் சித்தர் இவரை பொய்யாமொழி என்பர். ஹோமத்தின் சிற்சில பெயர்களைக் குறித்து அதன் பயனையும் விளக்குகின்றார்.

இதுபோன்று பல்வேறு வகையான யாகங்களால் மனித குலத்திற்கும் மனித நலனுக்கும் பயன் விளைவிக்கும் வகையில் நமது முன்னோர் விஞ் ஞானபூர்வாக விட்டுச் சென்றுள்ளனர்.

சமீபத்தில்கூட தமிழக அறநிலையத்துறை மூலம் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையால் தமிழக கோயில்களில் நடைபெற்ற யாகம், வேள்வி போன்றவற்றால், கத்திரி வெயிலில் கூட, திருவண்ணாமலை, மதுரை, போன்ற பல்வேறு கோயில்களில் நடைபெற்ற யாகத்தைத் தொடர்ந்து பல இடங்களில் இடியுடன் மழை பொழிந்ததை பல்வேறு பத்திரிகைகளில் செய்தியாக வெளியிட்டிருந்தது.

ஆனால் இன்று ஒருசில சுயநலவாதிகள் தொடர்ந்து இந்து மத சடங்கை பொது வெளியில் கேலி கிண்டல் செய்து தங்களை பகுத்தறிவாளர் என்ற போர்வைக்குள் அடைத்துக்கொண்டு, அதன்மூலம் பல்வேறு வருமானங்களை அனுபவித்து வருகின்றனர். ஆனால் மாற்று மதத்தை பற்றி இவர்கள் பேச சொன்னால் ஓடி ஒளிந்துக் கொள்வார்கள்.

ஆனால் அப்பாவி மக்கள், ஏமாற்றுவாதிகளை நம்பி, நம்முடைய முன்னோர் கூறிச்சென்ற பல்வேறு வாழ்வியல் முறைகளில் உள்ள பலனை அனுபவிக்காமல் தவிக்கின்றனர்.

பானையில் உள்ள தண்ணீரை குடிக்காமல், ஓட்டைப்பானை வைத்துள்ளவர்களிடம் தண்ணீர் தேடி அலைவதைப் போன்று நமது இந்து சமயத்தை ஆராயாமல் மாற்று மதத்தில் உள்ள சரக்கை தேடி அலைகின்றனர்.

தொகுப்பு: நாகராஜன்
போன்: 08825844033





# பெரியவா மழையை வரவைப்பாரா?

அந்தக்காலத்தில் சென்னையை மெட்ராஸ் என்றே கூறிவந்தனர். சென்னையில் பெரியவா வின் மகிமைகளைப் பற்றி கூறிக்கொண்டிருந்தார்

எல்லா இடத்திலும் விதண்டாவாதம் செய்வதற்கென்றே ஒருகூட்டம் அச்சமயம் அலைந்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரும் இந்த பிரசங்கத்தில் அமர்ந்திருந்தார்.

பெரியாவின் மகிமையால் பல இடங்களில் மழை பொழிந்ததைப் பற்றி பிரசங்கம் செய்து கொண்டிருந்த பெரியவாவின் பக்தர், பல வருடங்களாக ஒரு துளி கூட மழையே இல்லாத பல இடங்களில், பெரியவாளுடைய கருணை யால், மழை பெய்து சுபிக்ஷமான, விஷயங்களை சொல்லிக் கொண்டிருந்தார்.

விதண்டாவாத ஆசாமி திடீரென்று எழுந்தார்... "நீங்க அந்த ஸ்வாமிகள் மழையை பெய்ய வெச்சார்ன்னு சொல்லறீங்களே! அது நெஜம்னா, இன்னிக்கு இங்கே மெட்ராஸ்ல மழையை வரவழைக்க உங்க பெரியவங்க ளால் முடியுமா?" என்று நையாண்டித்தனமா கேள்வியோடு கூடிய சவால் விடும் தொனியில் கேட்டார்.

பெரியவாளுடைய கருணை உள்ளத்தைப் பற்றிப் பேசும்போதும், கேட்கும்போதும் மன பாரம் குறைந்து ஆன்மிகத்தில் பக்தர்களின் மனம் ஒடுங்கியிருக்கும். சாதாரண மனிதர்களுக்கே இப்படி இருக்கும்போது, பெரியவாவின் பெருமையை பற்றி பேசிக்கொண்டிருந்தவருக்கு நம்பிக்கை மிக அதிகமாகத்தானே இருக்கும்.

"ஏன் பெய்யாது? பெரியவாளோட அனுக்ரகத் தால இன்னிக்கு நிச்சியமா சென்னைல மழை பெய்யும்!" அழுத்தந்திருத்தமாக, அடித்துச் சொல்லிவிட்டார்.

அப்போது ஒரு உத்வேகத்தில் அப்படி சொல்லிவிட்டாரே தவிர, "ஒரு வேளை மழை பெய்யலேன்னா?... பெரியவாளோட பேருக்கு ஒரு களங்கம் வந்துடுமே! நாராயணா! அனாவஸ்யமா இப்பிடி ஒரு விதண்டாவாதியோட சவாலுக்கு பதில்சொல் லியிருக்கக் கூடாதோ?..." என்று உள்ளூர ஒரே கவலையில் இருந்தார்.



ப்ரசங்கம் முடிந்தும் கூட அந்த விதண்டாவாதி அங்கேயே அமர்ந்திருந்தார்.... மழை வருகிறதா? என்று பார்க்க!

பக்தனை பரிதவிக்க விடுவானா பகவான்? அங்கே காஞ்சிபுரத்தில் பெரியவா சுமார் ஒரு மணிநேரம் ஜபத்தில் இருந்தார். மெதுவாக கண்க ளைத் திறந்து அருகில் இருந்தவர்களிடம் சம்பந்தமே இல்லாத ஒரு கேள்வியைக் கேட்டார்...

"ஏண்டா?... இப்போ சென்னைல மழை பெய்யறதா?" சுற்றி இருந்த வர்கள் மலங்க மலங்க முழிப்பதைத் தவிர ஒன்றும் பண்ணத் தெரியாமல் இருந்தனர்! ஆம். மெட்றாஸ் (சென்னை) முழுக்க அப்போது மழை கொட்டோ கொட்டென்று கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது!

சென்னையில் மஹா பெரியவாவின் பக்தரின் கண்களிலும் நன்றிக் கண்ணீர்! ஆனந்தக் கண்ணீர் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது! பக்தன் தன் மேல் கொண்ட த்ருட விஸ்வாசத்தால் க்ஷணத்தில் கொடுத்த வாக்கை நிறைவேற்ற, பெரியவா இயற்கையையே இசைய வைத்துள்ளார் என்றால், பகவானுக்கு பக்தன் மேல் உள்ள அன்பை என்னவென்று சொல்லுவது?

விதண்டாவாதி அந்த இடத்தில் மனம்மாறி ஆச்சரியத்தில் உறைந்து போய் நின்றுகொண்டிருந்தார்.

# இறைவனின் அங்கீகாரத்தை நாடுங்கள்

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: “மனிதனின் புகழ்ச்சி நமக்குத் தேவையில்லை. ஆண்டவனின் அங்கீகாரத்தைத்தான் நாம் நாடிக்கொண்டிருக்கிறோம். இறைவனைக் காண்பதற்கு, நாம் துன்பப்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். மெய்பொருளின் நிரந்தர ஆறுதலைப் பெறுவதற்கு தேகத்தின் அசௌ கரியத்தைத் தாங்கிக் கொள்வதிலும் மற்றும் மனதை ஒழுங்குபடுத்துவதிலும் என்ன இழப்பு உள்ளது? இறைவனுக்காகத் தன் தேகத்தையே தியாகம் செய்யத் தயாராக இருக்கின்ற மகான் கள் கண்ட ஆனந்தத்தை அடைவதுதான் இறை வனைக்காணுதல்.”

“துறவு ஒரு முடிவு அல்ல; அது ஒரு முடிவை அடைவதற்கான மார்க்கம் மட்டுமே. தனது புறவாழ்க்கையின் விதத்தைப்பற்றிக் கவலைப்படாமல் முதலில் இறைவனுக்காகவாழ்கின்றவன் எவனோ அவனே உண்மையான துறவி. இறைவனை நேசித்துஅவனை மகிழ்விப்பதற்காக உங்கள் வாழ்க்கையை நடத்துவது என்பதுதான் முக்கியமானது. நீங்கள் அதைச் செய்யும்பொழுது இறைவனை அறிவீர்கள். உங்கள் மனதிலுள்ள ஒவ்வொரு சிந்தனையையும் உங்களை அவனிடம் மிகவும் நெருக்கத்தில் கொண்டு செல்கிறது. அந்தச் சிந்தனைகள், மெய்ப்பொருள் என்னும் கடலுக்கு அழைத்துச் செல்கின்ற ஒரு நதி போன்றதாகும்.”



இறைவனை வசப்படுத்துவது பக்தி, என்னும் ஒரு காணிக்கைதான். அவனுக்கு அளிக்கப்படும் அனைத்து விலையுயர்ந்த பரிசுகளாலும், வாக்குறுதிகளாலும் அவன் மயங்குவதில்லை.

ஆனால் இனிய பக்தி யென்னும் நறு மனம் கமழும் வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் இறைவன் எழுந்தருள்வதற்கு தூண்டப்படுகிறான். உங்கள் இதய ரோஜாவிலிருந்து உங்கள் பக்தியின் நறுமணம் கசியும்பொழுது வல்லமை படைத்த இறைவன் உங்களிடம் வந்தேயாக வேண்டும். நம் எண்ணங்கள் இறைவனைவிட்டு எப்படி ஓடிச்சென்றாலும் சரி, அல்லது நாம் எவ்வளவு துர்பாக்கியமானவர்கள் என்று உணர்ந்தாலும் சரி, நம் பக்தியின் பாதச்சுவடுகள் நம்மை மெய்ப்பொருளின் புகலிடத்திற்கு அழைத்துச் செல்கின்றன. நாம் எத்தனை தூரம் வழி தவறிச்சென்றுவிட்டிருந்தாலும் சரி, பக்தியின் மூலம் மீண்டும் நாம் அவனை அடையமுடியும்; நமது வாழ்க்கைகள் வீணடிக்கப்படவேண்டியதில்லை.”

மேலும் அவர் கூறுகிறார்: “உங்களுக்கு அன்றாடக் கடமைகள் இருந்தாலும்,உங்களால் இறைவனை நாடமுடியாது என்று சொல்வதற்கு அவை சாக்கு கிடையாது. மற்றவர்கள் உறங்கும் போது நீங்கள் அவன்மேல் ஒருமுகப்படுங்கள். நீங்கள் நூறு மடங்கு சந்தோஷமாகவும் ஓய்வு எடுத்ததாகவும் உணர்வீர்கள். இதை ஒவ்வொரு இரவும், நேரத்தைப்பற்றி எண்ணாமல் செய்யுங்கள். நீங்கள் தியானம் செய்யும்பொழுது இதைமட்டும் உங்களுக்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள், “நான் அவனுடன் இருக்கிறேன். அதுமட்டுமே முக்கியம்,” ஒரு விதையை நீங்கள் விதைக்கும்போது ஒவ்வொரு நாளும் அது முளைவிட்டுள்ளதா என்று அதை வெளியில் எடுக்கக்கூடாது; நீங்கள் அதன் வளர்ச்சியை தடுக்கவே செய்வீர்கள்.

அதுபோல்தான் உங்கள் ஆன்மீக முயற்சிகளின் விதைகளும் அவைகள்நடப்பட்டவுடன் அவைகளை அங்கேயே விட்டுவிடுங்கள். அத்துடன் அவற்றை கவனத்துடன் பேணுங்கள்.”

“தியானம் என்னும் கடலில்ஆழ்ந்து மூழ்குங்கள். அவனது இருப்பாகிய முத்துக்களை நீங்கள் காணவில்லையென்றால் கடலை குறைகூறாதீர்கள். உங்கள் மூழ்குதலை குறை கூறுங்கள். அவனைக் காணும் வரை மீண்டும் மீண்டும் மூழ்குங்கள்.

“தேடுங்கள்.. அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். அடம் பிடிக்கும் குழந்தைதான் அன்னையின் கவனத்தை ஈர்க்கும் என்பதை நினைவில் வைய்யுங்கள். மிகச்சுலபமாக சமாதானம் செய்யப்படும் குழந்தை, பொம்மைகளோடு திருப்தியடைகிறது. ஆனால் அடம் பிடிக்கும் குழந்தை தாயை மட்டும்தான் கேட்கிறது; அவள் வரும்வரை அழுகையை நிறுத்தவில்லை. தெய்வீக அன்னை வரும்வரை கதறி அழுங்கள்!”

மேலும் அவர் அருளுகிறார்: “இறைவன் அவனது பக்தர்களுக்கு மிகவும் நிஜமானவனாக இருக்கின்றான்! அவனைப்பற்றி அவர்கள் கூறியுள்ள ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானது. ஆனால் அவனது லீலை, மர்மத்தால் சூழப்பட்டுள்ளது. உங்களுடைய தேடல் இடைவிடாமல் இருக்க வேண்டும். ஒரு சிறிது அழுகையினால் அவனை நீங்கள் வரவழைக்க முடியாது. அது முடிவற்றதாகவும் பணம், புகழ் மற்றும் மனித அன்பு ஆகிய விளையாட்டு பொம்மைகளால் தணிக்கப்பட முடியாததாகவும் இருக்க வேண்டும். உங்களுடைய ஆசை அவனுக்காக மட்டுமே என்றால், அவன் வருவான்.

பிறகு உலகத்தின் உங்கள் பாடங்கள் எல்லாம் முடிந்துவிடுகின்றன. நீங்கள் எல்லையற்ற பரம்பொருளின் ஆனந்தத்தால் என்றென்றும் நிரப்பப்படுகிறீர்கள்.

"எனக்காக கர்மம் செய்கிறவனும், என்னைக்குறியாகக் கொள்பவனும் என்னிடத்தில் பக்தி செய்பவனும் பற்றற்றவனும் (எனது மாயபிரபஞ்சகனவு உலகங்களிடம்) எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பற்றவனும்

59
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

(எல்லாவற்றிலும் என்னைக்கண்டு) எவனோ அவனே என்னை அடைகிறான்."

(பகவத்கீதை 11 ஸ்லோகம் 55)

மேலும் குருதேவர் கூறுகிறார்: "நாம் இறைவனின் சாம்ராஜியத்தை அடை வதை உலகப்பற்று என்னும் ஒரு வலிய விஷயம் தடை செய்யக்கூடாது என்ப தற்காக மகான்கள் பற்றின்மையை வலியுறுத்துகின்றனர். துறவின் பொருள் எல்லாவற்றையும் விட்டு விடவேண்டும் என்பதல்ல. அது நித்திய ஆனந்தத்திற்காக சிறிய இன்பங்களை விட்டுவிடுவது எனப்பொருளாகும்."

"சோம்பேறி இறைவனை அடையவேமுடியாது. சோம்பலான மனம் பிசாசின் தொழிற்கூடமாக ஆகிவிடுகிறது. ஆனால் செயலின் பலன்களில் எவ்விருப்பமும் இன்றி இறைவனை மட்டுமே விரும்பி தம் வாழ்க்கையை அமைத்துக் கடமையாற்றுபவர்கள்தான் உண்மையான துறவிகள். நாம் இந்த மாயமான உலகிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். அவன் நமக்காக அழுகிறான். ஏனெனில் இறைமுக்தியடைவது எவ்வளவு கடினம் என்பதை அவன் அறிவான். ஆனால் நீங்கள் அவனுடைய குழந்தை என்பதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நீங்கள் உங்கள் மீதே இரக்கம் கொள்ளவேண்டாம். மகான்கள் எப்படி நேசிக்கப்படுகிறார்களோ அப்படியே நீங்களும் இறைவனால் நேசிக்கப் படுகிறீர்கள், அவனுடைய அன்பை நீங்கள் நாடவேண்டும். ஏனெனில் அது நிரந்தர விடுதலை. முடிவற்ற ஆனந்தம் மற்றும் இறவாமையை தன்னுள்ளடக்கியுள்ளது."

"இறைவனுடன் காதல் கொள்வதுதான் மிகச்சிறந்த காதல். வாழ்க்கை எவ்வளவு அழகாக இருக்கக்கூடும் என நீங்கள் எண்ணியே பார்க்க முடியாது. திடீரென்று நீங்கள் இறைவனை எங்கும் காணும்பொழுதும், இறைவன் உங்களி டம் வந்து, உங்களிடம் பேசி, உங்களை வழி நடத்தும்பொழுதும், இறைவனின் தெய்வீகக் காதல் காவியம் தொடங்கிவிடுகிறது".

எல்லாம் இறைவனே என்பதுதான் என் கருத்து. அதுபற்றிக்கூற விரும்புகிறேன். மேலே கூறப்பட்டுள்ள குருதேவரின் போதனைகள் மனித ஆத்மாக்களுக்கு இறைவனுடனான நெருக்கத்தை ஏற்படுத்துகிறது. இறைவனை நேசிக்கின்ற ஒரு பக்தன் இறைவனுடன் நெருக்கமானால் அதாவது இறைவன் அவனை விரும்பத்தொடங்கினால் அந்த பக்தனுக்கு நடப்பதெல்லாம்நன்மையே.

உதாரணமாக அவ்வாறான ஒரு பக்தனுடன் இருப்பவர்கள் அதுவரை சண்டை போட்டுக் கொள்பவர்கள்கூட பின்னர் அதை நிறுத்திவிடுவர். அது அவர்களாகவே நிறுத்துவதல்ல; இறைவனே நிறுத்திவிடுவதாகும். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது"என்பதுதான் உண்மை. அனைத்திற்கும் (நன்மை தீமைகளுக்கெல்லாம்) காரணகர்த்தா இறைவனே! ஒரு சில காலம்வரை அந்த பக்தனுடனிருப்பவர்கள் சண்டை போடுவர்; அவனுக்குப் பலவிதத்திலும் தொல்லை தருவர். அதை இறைவனேதான் செய்யவைக்கிறான். அதன்பின்னர் தொல்லை செய்தவர்களை வைத்து நல்ல உறவாக இருக்கவைப்பதும் இறைவனேதான். இவ்வாறு செய்வதெல்லாம் அந்த பக்தனை தன்னுடன் இணைத்துக்கொள்வதற்காகத்தான்."



மனம், வாக்கு, செயல் இவற்றால் பிறருக்கு எந்தவிதத்திலும் தீங்கிழைக்காமல் இதய சுத்தி யுடன் இருத்தல், ஒழுக்க நெறிமுறைகளைக் கடைபிடித்து சுய கட்டுப்பாட்டுடன் இருத்தல், குருதேவருடைய போதனைகளைக் கடைபிடித்தல் மற்றும் யோகதா யுக்திகளை தவறாமல் செய்து தியானம் என்கின்ற தர்மத்தைச் செய்வதாலும் இறைவனிடத்தில் உண்மையான அன்புடனும் விசுவாசத்துடனும் இருத்தல் போன்று எல்லா விதத்திலும் வாழ்க்கையை சரியாக வாழ்பவர்கள் இறைவனடி சேருவர். ஒழுக்க நெறிமுறைகள் தியானத்தை மேம்படுத்தும். அது இறைவனை அடைவதற்கு வழிகோலும். குருதேவர் கூறுகிறார்:

"சரியான வாழ்க்கை: சரியான சிந் தனை; சரியான தியானம் இவற்றைக் கடைபிடிக் கின்ற சேவை மனப்பான்மையுடைய ஒரு மனிதன் நிச் சயம் இறைவனை அடைவான். அதுமட்டுமன்றி உலகப் பொருட்கள் எதை துறந்தாலும். அது இறைவனின் பாதையைச் சென்றடையச்செய்கிறது."

தமக்கு விதித்த பணிகளை சரியாகச் செய்து இறைநினைவுடன் வாழுபவர்களுக்குப்பல சோதனைகளை இறைவன் அருளுவான்.சோதனைகள் இறைவனின் அருளேயாகும். இவற்றையெல்லாம் வென்று, நம்மையெல்லாம் ஆட்டிவைக்கின்ற இறைவனின் பரிபூரண அருளாசியை பெறும் ஒரு பக்தனுடன் இறைவன் இருப்பான். சோதனைகள் இறைவனுடன் உள்ள நெருக்கத்தை அதிகரிக்கச் செய்கிறது. உலக வாழ்வு அல்லது நமது வாழ்க்கை அது இறைவனுடனுள்ள வாழ்வே யாகும். 'அதுவே மேன்மையான வாழ்வு. அதைப் புரிந்துகொள்பவர்கள் பிரபஞ்சத் தந்தையான பேரன்புக்குரிய இறைவனைத் தேடுவர்; கண்டடைவர்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# உலக தத்துவம்

❖ பூமிக்கு வந்த மனிதன் கர்மம், பக்தி, யோகம், ஞானம், சிந்தனை, பொருளாதாரம் என்கின்ற காசு, காமம் என்கின்ற களி, அறியாமை என்கின்ற உயிருக்கு செய்கின்ற வஞ் சகம் இவைகளில் புகுகின்றான். இந்த செய்கைகளை மாற்றவே பக்திப்பிரச்சாரம், மதப்பிரச்சாரம், ஞானப்பிரச்சாரம் இவைகள் நடைபெறுகின்றன. கூடியவரையில் பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ மாறிய மனிதன் மாறட்டும். மாறாத மனிதனுக்காக கவலை கொள்கிறோம் என்கிறார்கள்.

❖ பிறக்கின்ற மனிதர்களின் இத்தன்மைகள் உடலில் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? மூளைக்குள், மண்டை ஓட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கிறது. மண்டை ஓட்டின் அளவு, அதன் நீள அகலம், அதன் கொள்ளளவு, பெற்றோர்களின் வீரிய வேகம் இதுவே அதனளவு. தாயின் யோனிவாய் என்ற எலும்பினளவு இதை வைத்து குணங்களை செய்கைகளை அளந்து விடலாம். நன்மை தீமை அனைத்துமே ஆராய்ச்சியில் வெளிப்பட்டுவிடும்.

இம்மனிதன் மாறுவானா, மாறமாட்டானா என்று சொல்லிவிடலாம். இக்கொள்கையின் பெயரே வேற்றுமையில் ஒற்றுமை. ஒற்றுமையில் வேற்றுமை என்று இன்றைய உலகம் இருக்கிறதே ஒழிய உண்மையாய் இல்லை. ஆராய்ந்து பார்த்தால் அனைவரும் ஒற்றுமையாய் இருக்கின்றனர். அனைவரும் வேற்றுமையாய் இருக்கின்றனர். இதுவே உலக தத்துவம்.



❖ பொருளாதார தத்துவத்துறையாலும்,சிந்தனை தத்துவத்துறையாலும், மதத்தத்துவத்துறையாலும், கடவுளைச் சொல்லி ஒற்றுமையை ஏற்படுத்துவதனாலும், செய்கின்ற ஒற்றுமைகளெல்லாம் ஒருவிதமான ஒற்றுமைகளே. மனித மண்டலம் கலங்கிவிடக் கூடாது என்பதற்காகவே இத்தத்துவங்கள் கையாளப்படுகின்றன.

❖ மற்றபடி கடவுளை உணருவது, சிந்திப்பது, முழுமையடைவது, தானே உண்மையை உணருவது, பிரபஞ்சம் என்ற உலகோடு ஒன்றுபடுவது, கடவுள் என்ற பெரிய தத்துவத்தோடு இணைவது இதுவே மனிதனால் செய்யமுடியும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028




ஞானிகளின்
125வது புத்தகம்

தெளிவான
நீரோடைக்கு வழி

ஞானிகள் அருளிய சொற்பொழிவுகளிலிருந்து தொகுக்கப்பட்ட அற்புதமான சிந்தனை துளிகளுடன் 9.6.2019 அன்று வெளியிடப்படும் இந்நூலை படித்து பயன்பெறுங்கள்

தொடர்பு கொள்ள:
098840 13113
098410 28028


ஆன்மிகமலர் மெயில் புக்



# சிறப்பு வாய்ந்த சாளக்கிராமம்

சாளக்கிராமம் என்பது கண்ணனின் நிறம் கொண்ட கல் ஆகும்.

இது இந்துக்களால் திருமாலின் அருவத் தோற்றமாகக் கண்ணனை வழிபடப்படும் சிறப்புக் கல்லாகும்.

இந்து சமயம் பெரும்பாலும் உருவ வழிபாட்டைக் கொண்டிருந்தாலும் சிவனை சைவர்கள் லிங்க வடிவில் வழிபடுவதுபோல வைணவர்கள் திருமாலை சாளக்கிராமக் கற்களில் வழிபடுகின்றனர்.

இந்தப் புனிதக் கற்கள் நேபாளத்தின்முக்திநாத் பகுதியில் கண்டகி ஆற்றங்கரைகளில் காணப்படுகின்றன. இக்கற்களில் இயற்கையாகவே திருமாலின் சங்கு, சக்கரம், கதை, தாமரை போன்ற உருவங்கள் காணப் படுகின்றன.

இவை நெடுங்காலமாக கோவில்கள், மடங்கள், வீடுகளில் வைக்கப்பட்டு வழிபடப் படுகிறது.

பலவித வடிவங்களில்உள்ள சாளக் கிராமங்கள் அவற்றில் பதிந்துள்ள உருவம், அமைப்பு இவற்றிற்கேற்ப திருமாலின் பல அவதாரங்களாக பெயரிடப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவை ஓர் குறிப் பிட்ட அமைப்பில் உள்ள கற்கள் கேசவம் என அழைக்கப்படுகின்றன.

இவ்வாறாக கேசவம், மாதவம், நாராயணம், கோவிந்தம், விஷ்ணு, மதுசூதனம், திரிவிக் கிரமம், வாமனம், சிறீதரம், இரிசி கேசம், பத்மநாபம், தமோதரம், சங்கர்சனம், பிரத்யும்னம், நரசிம்மம், சனார்த்தனம், அரி, கிருஷ்ணம், சந்தான கோபாலன், லட்சுமி நாராயணன், வராகமூர்த்தி, மத்ஸ்யமூர்த்தி, கூர்மம், சுதர்சனம், ஹிரண்ய கர்ப்பம் என்று அறுபத்தியெட்டு வகை சாளக்கிராமங்கள் உள்ள தாக பண்டைய நூல்கள் தெரி விக்கின்றன.

பண்டைய காலத்தில், மன்னர் களின் சபைகள், ஊர் பொது சபைகள் ஆகியவற்றில் வழக்குகளில் சாட்சி சொல்லும் போது சாளக்கிராமத்தைக் கையில் கொடுத்து "சாளக்கிராம



## தீய சக்திகளை தடுக்கும்

வீடுகளில் சாளக்கிராமத்தை வைத்து பூஜை செய்தால் எந்த வித தீய சக்திகளும் வீட்டை நெருங்க அஞ்சும், சைவர்கள், வைணவர்கள் அவரவர்களுக்கு உரிய சிவன் சாளக்கிராமம், விஷ்ணு சாளக்கிராமத்தை பூஜையறையில் வைத்து தினமும் அபிஷேகம் செய்து வந்தால் பல கோடி புண்ணியங்கள் கிடைக்கும்.

அனைத்து வீட்டு பூஜையறையிலும் சாளக்கிராமத்தை வைத்து பூஜை செய்யலாம், சைவம், அசைவம் போன்ற உணவு பிரச்சனை, வீடுகளில் பூஜையறையில் போதிய வசதியின்மை போன்ற பிரச்சனைகள் உள்ளவர்கள், காலையில் குளித்து சாளக்கிராமத்திற்கு அபிஷேகம் செய்தவுடன், அந்த சாளக்கிராமத்தை ஒரு சிறிய செம்பு அல்லது வெள்ளி கிண்ணத்தில் தண்ணீர் நிரப்பி (படத்தில் உள்ளது போன்று) அந்த தண்ணீருக்குள் சாளக்கிராமத்தை வைத்துவிட்டால் எந்த வித தோஷங்களும் அண்டாது.

பூஜை செய்யும் போது மட்டும் தண்ணீரை செடி, மரம் அல்லது கால் மிதிபடாத இடங்களில் கொட்டிவிட்டு சாளக்கிராமத்திற்கு பூஜை செய்த பின் மீண்டும் அந்த கிண்ணத்தில் புதிய தண்ணீர் நிரப்பி சாளக்கிரமத்தை அதில் வைத்து விடலாம்.

இதை தொடர்ந்து வீடுகளில் குடும்ப தலைவன் அல்லது குடும்ப தலைவி செய்து வந்தால் அவர்கள் தலைமுறை சந்ததிகளுக்கும் எந்தவித தீய சக்திகளாலும் எவ்விதத் தொந்தரவும் ஏற்படாது.









www.aanmeegamalar.com





"சாட்சியாக" என்று சத்தியம் வாங்கி சாட்சி சொல்லும் வழக்கம் இருந்தது.

## புராணக் குறிப்புகளில் சாளக்கிராமம்

### கருடபுராணம்:

மரண காலத்தில் சுயநினைவுடன் சாளக்கிரா மத்தை மனதால் வணங்குபவன் பாவங்களில் இருந்து விடுபடுகிறான் என்றும், இறக்கும் போது சாளக்கிராம தீர்த்தத்தின் ஒரு துளி தீர்த்தத்தை அருந்தி உடலை விடுவோர் வைவஸ்வதம் (வைகுண்டம்) அனுப்பி வைக்கப்படுவதாக கூறப் பட்டுள்ளது.

### விஷ்ணு புராணம்

கண்டகி என்னும் புண்ணிய ஆற்றில் நீராடி முக்தி நாதனை பக்தியுடன் வழிபடுபவன், பூவுலகில் சுகமாக வாழ்ந்து பின்னர் வைகுண் டத்தில் தன்னுடன் இருப்பதாக விஷ்ணு கூறுவதாகக் கூறப் பட்டுள்ளது.

### பத்ம புராணம்

சாளக்கிராமம் உள்ள வீடு வை குண்டத்திற்கு சமம் என்று பத்மபுராணம் கூறுகிறது.

சாளக்கிராம திருமஞ்சன தீர்த்தம் கங்கா தீர்த்தத்தைவிட உயர்ந்தது என்று ஸ்ரீ சாளக் கிராம தத்துவ முக்தாவளி எனும் நூல் கூறுகின்றது, திருச்சாளக்கிராமம் நூற்றி எட்டு வைணவத் திருத்தலங்களில் ஒன்று. சாளக்கிராமத்தலம் மலைமீது அமைந்துள்ளது. நேபாள அரசின் அனுமதி பெற்று தரிசிக்க வேண்டிய திருத்தலம். சக்ரதீர்த்தம் எனும் கண்டகி நதியின் உற்பத்திப் பகுதிதான் சாளக்கிராமம் தலம்.

ராமானுஜரும் இத்திருத்தலத்தைப் பாடியுள் ளார்.

இந்தியாவில் உள்ள கோமதி ஆற்றில் கிடைக்கும் தனித்துவமான கல்லை துவா ரகா சிலா என்றழைப்பர். துவாரகா சிலா மகாலட்சுமியின் அம்சம். சாளக்கிராமத்துடன் துவாரகா சிலாவையும் சேர்த்து வழிபடுவது மிகச்சிறப்பானது.

மேலும் சாளக்கிராமம் பற்றிய செய்தி நமது ஆன்மிகமலர்.காம் aanmeegamalar.com இணையதளத்தில் அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது படித்து பயன்பெறலாம்.

தொகுப்பு: ச.நாகராஜன்,
போன்: 08825844033



aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர்.காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்



# இந்த பழக்கத்தை தொடருங்கள்... நோய் உங்களை கண்டு ஓடும்

நமது பாட்டன் முப்பாட்டன் காலத்தில் வெற்றிலைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை, இக்காலத்தில் நாம் கொடுக்கத் தவறியதால்தான் பல்வேறு நோய்கள் நம்மை தாக்கிவருகிறது.

நமது முன்னோர் காலை, மத்தியம், இரவு வேளைகளில் வெற்றிலை போடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். இதனால் அவர்களுக்கு வாதம், பித்தம், கபம் போன்றவை கட்டுக்குள் இருந்தது.

நாகரீகம் என்ற போதைக்கு நாம் எப்போது அடிமையாகிப்போனோமோ, அன்றையிலிருந்து நாம் வெற்றிலையை ஒதுக்கிய தன் விளைவுதான், இன்று பல்வேறு புதுப் புது நோய்கள் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது.

பழம்தமிழர் மரபாகட்டும், இந்திய பண்பாடாக இருக்கட் டும் அவை எல்லாமே காரண காரியத் தோடு உருவாக்க பட்டது தான்.

முடி வெட்டுவதில் இருந்து, மன்னர்கள் முடிசூடுவது வரை கடைப்பிடிக்கபடும் சடங்கு களில் பல்வேறு வாழ்க்கை தத்துவங்கள் அடங்கி உள்ளன.

வாழ்க்கையை நெறிபடுத்தும் தத்துவ முறை கள் மட்டுமல்லாது உடலை வளப்படுத்தும் நல்ல காரியங்கள் கூட அதில் அடங்கி இருக்கும்.

தாம்பூலம் தரிப்பதில் கூட இப்படி ஒரு நல்ல விஷயம் அடங்கி இருக்கிறது.

பொதுவாக வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து சுவைக்கும் போது அந்த சுவை உடலையும் மூளையையும் சுறுசுறுப்படைய செய்கிறது அதே நேரம் இதயத்தையும் வலுப்படுத்துகிறது.

மனித உடலுக்கு நோய் ஏன் வருகிறது? என்பதற்கான காரணத்தை சித்தவைத்தியமும் ஆயுர்வேத மும் சொல்லும் போது உடம்பில் உள்ள வாதம், பித்தம், கபம் (சிலேத்துமம்) போன்றவைகள் சரியான விகிதத்தில் இல்லாமல் கூடும் போதோ குறையும் போதோ நோய் வருகிறது, என்று சொல்கிறார்கள் இது முற்றிலும் சரியான காரணமாகும்.

இந்த மூன்று சத்துக்களும் சரியான கோணத்தில் உடம் பில் அமைந்துவிட்டால் நோய் வராது என்பதை விட நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் (நோய் எதிர்ப்பு சக்தி) உடம்பிற்கு வருகிறது.

> பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கண்டிக்க கூடியது.
>
> சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்கவல்லது.
>
> வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கும்.
>
> இது மூன்றும் சரியாக இருந்தால் மனித உடலை நோய் அண்டாது.

இந்த மூன்று நிலைகளையும் சரியானபடி வைக்க தாம்பூலம் உதவி செய்கிறது.

பாக்கில் இருந்து கிடைக்கும் துவர்ப்பு பித்தத்தை கண்டிக்க கூடியது.

சுண்ணாம்பில் உள்ள காரம் வாதத்தை போக்கவல்லது.

வெற்றிலையில் உள்ள உரைப்பு கபத்தை நீக்கி விடும்.

இப்படி பார்த்தால் தாம்பூலம் போடுதல் என்ற ஒரே பழக்கத்தில் உடம்பில் உள்ள மூன்று தோஷங்களையும் முறைபடுத்தும் நிலை அமைந்து விடுகிறது.

இதுமட்டுமல்லாது தாம்பூலத்தோடு சேர்க்கும் ஏலம், கிராம்பு, ஜாதிபத்திரி போன்றவைகள் வாயில் உள்ள கிருமிகளை மட்டுபடுத்துகிறது. ஜீரண சக்தியை அதிகரிக்கவும் செய்கிறது.

ஆக மொத்தம் வெற்றிலை போடுவதால் இத்தனை நல்ல விஷயங்கள் அடங்கி உள்ளன.

அதனால் தான் நமது விருந்துகளில் வெற்றிலைக்கு முக்கிய பங்கு கொடுக்கப் படுகிறது.

தாம்பூலம்

## பாம்பு கடிக்கு தீர்வு

பாம்பு கடியினால் விஷமேறி எவராவது இறந்துவிட்டதாக நினைத்து இறுதி சடங்குகளை செய்யாதீர்.

பாம்பு கடித்த விஷத்தினால் யாராவது மரணமடைந்து விட்டால். அவரின் கண்களை திறந்து பாருங்கள் கண் கருவிழிகள் உங்களையே நேர் நோக்கி பார்க்கிறது என்றால். அவர் மரணமடைந்துவிட்டார் என உணந்துகொள்ளவும். கண் கருவிழிகள் கீழ் அல்லது மேல் நோக்கியோ அல்லது பக்கவாட்டிலோ இருந்தால் அவ்வுடாலில் உயிர் இருக்கிறது என உணர்ந்து கொள்ளவும்.

நாடி துடிக்காது, இரத்த ஓட்டம் இருக்காது, கண் இமைகள் மூடித்திறக்காது, ஆனால் உடலில் உயிர் இருக்கும். மூன்று வெற்றிலை பத்து கல்லுப்பு பத்து மிளகு ஆகியவற்றை வாயில் போட்டு மென்று, அந்த சாற்றை இரண்டு துளிகள்வீதம் இரண்டு கண்களிலும், மூக்கு துவாரங்களில் இரண்டுதுளிகள் விட்டு மூக்கு துவாரங்களை ஊதினால் உடனே விஷம் முறிந்து கை கால்கள் விறையல் கொடுக்கும் உடனே மீண்டும் மருத்துவ மனைக்கு கொண்டுச்செல்லவும்.

இச்செயலானது அமாவாசை பௌர்ணமி அஷ்டமி நவமி ஆகிய நான்கு நாட்களில் செயல்படாது.




ஆன்மிகமலர் மெயில் புக்



போடுவது எந்த இடத்தில் கெட்ட பழக்கமாக மாறு கிறது என்றால் வெற்றிலை பாக்கு சுண்ணாம்போடு புகையிலையும் சேரும் போது தீய பழக்கமாக மாறி விடுகிறது.

நமது முன்னோர்களின் தாம்பூலத்தில் புகையிலை கிடையாது.

புகையிலை என்பது இடையில் சேர்க்க பட்ட தீய பழக்கமாகும்.

இப்போது வயதானவர்களுக்கு இருக்க கூடிய அபாயங்களில் மிக முக்கியமானது எலும்பு முறிவு ஆகும்.

சிறிதளவு முறிவு ஏற்பட்டு விட்டாலும் முதுமையின் காரணமாக பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தி விடுகிறது.

பல நேரங்களில் சாதாரண எலும்பு முறிவே மரணத்தை பரிசாக தந்து விடுகிறது.

ஆனால் பத்து இருபது வருடங்களுக்கு முன்பு முதியவர்களுக்கு எலும்பு முறிவு என்பது அவ்வளவு சீக்கிரம் ஏற்படாது இதற்கு காரணம் அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கமே ஒரு குறிப்பிட்ட அளவு சுண்ணாம்பு சத்து உடம்பிற்கு நேராக கிடைக்கும் போது எலும்புகள் வலுப்பட்டு விடுகிறது.

தாம்பூலம் போடுவதற்கென்று தனிப்பட்ட நெறிமுறையே நமது முன்னோர்களால் வகுக்க பட்டிருக்கிறது.

காலையில் சிற்றுண்டிக்கு பிறகு போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாக இருக்க வேண்டும்.

காரணம் மதிய நேரம் வந்து வெப்பம் அதிகமாகும் போது உடம்பில் பித்தம் ஏறாமல் அது பாதுகாக்கும்.

அதே போல மதிய உணவிற்கு பிறகு சுண்ணாம்பு சத்து அதிகம் எடுத்துகொள்ள வேண்டும் அது உணவில் உள்ள வாதத்தை அதாவது வாயுவை கட்டுபடுத்தும்.

இரவில் வெற்றிலையை அதிகமாக எடுத்து கொண்டால் நெஞ்சில் கபம் தங்காது இந்த முறையில் தான் தாம்பூலம் தரிக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் கட்டளை.

தற்போது கடைகளில் பாக்கு என்ற பெயரில் பல்வேறு வகையான சுவைகளில் கிடைக்கும் பாக்குகளைவிட, எந்த வித கலப்படம் செய்யாமல் இருக்கும் கொட்டைப்பாக்கு போன்றவற்றை தாம்பூலத்திற்கு பயன்படுத்துவது சிறப்பாகும்.

இதுபோன்ற மிகச் சிறந்த சர்வரோக நிவாரணியான தாம்பூலத்தை நம் தலைமுறையினர் தவறியதால்தான் தற்போது சுகர், இதய நோய், எலும்பு முறிவு, மூச்சிறைப்பு, போன்ற நோய்கள் 75 சதவீத மக்களுக்கு பொதுவான நோயாக அமைந்துள்ளது.

இனியாவது வெற்றிலை பாக்கு சுண்ணாம்புக்கு சற்று முக்கியத்துவம் தந்து, மருந்து மாத்திரைகளிலிருந்து நம் சமுதாயத்தையாவது பாதுகாக்க முற்படுவோம்.

ச.நாகராஜன்,
போன்: 8825844033

## வலிகளுக்கு தீர்வு

வெற்றிலை அனைத்து வலிகளுக்கும் நிவாரணி ஆகும். வெட்டுக்கள், சிராய்ப்புகள், வீக்கம் என அனைத்திற்கும் வெற்றிலையை பயன்படுத்தலாம். வெளிப்புற காயங்களுக்கு வெற்றிலையை அரைத்து பசையாக்கி காயங்களின் மேல் தடவலாம், உட்புற வலிகளுக்கு வெற்றிலையை மென்றோ அல்லது சாராகவோ குடிக்கலாம். இதன்மூலம் உடனடி நிவாரணம் கிடைக்கும்.

இரைப்பை வலி வெற்றிலை கெர்ட் (GERD) எனப்படும் இரைப்பையில் ஏற்படும் நோயை கட்டுப்படுத்துகிறது. இதில் உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய நச்சுப்பொருட்கள் சிறிதளவும் இல்லை. மேலும் சமநிலையற்ற பிஹெச்(PH) ஆல் ஏற்படும் அமிலத்தன்மையை குறைக்கிறது.

இது பிஹெச்(PH) அளவை சீராக்குவதோடு இரைப்பையை சுத்திகரிப்பு செய்வதிலும் உதவுகிறது. எனவே இரைப்பை வலி ஏற்பட்டால் உடனடியாக வெற்றிலையை சாப்பிடுங்கள்.

உணவை எளிதாக ஜீரணமாக்கிவிடும், பசியைத் தூண்டும் சக்தி வெற்றிலைக்கு உண்டு. அஜீரணக் கோளாறால் அவதிப்படுபவர்கள் அவசியம் வெற்றிலையை எடுத்துக் கொள்ளுங்கள்.

வாய் துர்நாற்றம், வயிறு சம்பந்தப் பிரச்சனை உள்ளவர்கள் வெற்றிலை போடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை
தெளிவாகவும், விரிவாகவும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.
www.aanmeegamalar.com

# மகாலட்சுமி வீட்டில் தங்க...

லட்சுமியை விரும்பாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள், லட்சுமி தேவி வீட்டில் வாசம் செய்தால் போதும் என்ற மனப்பான்மை யில்தான் அனைவரின் ஆன்மிக வழிபாடும் அமைந்திருக்கும்.

இந்த வகையில் பல்வேறு லட்சுமிகள் நமது வீடுக ளில் குடிகொள்ள ஒருசில வழிபாட்டு முறைகள் செய்தால் மட்டும் போதாது மனதளவிலும் ஒருசில வழி முறைகளை கடைபிடிக்கவேண்டும், அவ்வாறு எந்த செயலை மேற்கொண்டால் எந்த லட்சுமி நம்முடன் தங்கி அருள் வழங்குவாள் என்பதை பார்ப்போம்.

**ஸ்ரீதனலட்சுமி:** நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் இருக்க வேண்டும், போதும் என்ற மனதோடு நேர்மையுடன் வாழ்ந்தால் தனலட்சுமியின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.

**ஸ்ரீவித்யாலட்சுமி:** எல்லா உயிரினங்களிலும் தேவியானவள் புத்தி உருவில் இருப்பதால் நாம் நம் புத்தியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அன்பாகவும், இனிமையாகவும் பேச வேண்டும். யார் மனதையும் புண்படுத்தாமல் நடந்து கொண்டால் ஸ்ரீவித்யாலட்சுமியின் அருளைப் பெறலாம்.

**ஸ்ரீதான்யலட்சுமி:**ஸ்ரீதேவியானவள் பசி நீக்கும் தான்ய உருவில் இருப்பதால் பசியோடு, நம் வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்து உபசரித்தல் வேண்டும். தானத்தில் சிறந்த அன்னதானத்தைச் செய்து ஸ்ரீதான் யட்சுமியின் அருளை நிச்சயம் பெறலாம்.

**ஸ்ரீவரலட்சுமி:** உடல் பலம் மட்டும் வீரமாகாது மனதில் உறுதி வேண்டும், ஒவ்வொருவரும் தாங்கள் செய்த தவறுகளையும் பாவங்களையும் தைரியமாக ஒப்புக் கொள்ள வேண்டும், நம்மால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, இனி தவறு செய்ய மாட்டேன் என்ற மன உறுதியுடன் ஸ்ரீவரலட்சுமியை வேண்டினால் நன்மை உண்டாகும்.

**ஸ்ரீசவுபாக்யலட்சுமி:** ஸ்ரீதேவி எங்கும் எதிலும் மகிழ்ச்சி உருவில் இருக்கின்றாள். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருக்க வேண்டும். பிறர் மனது நோகாமல் நடந்தால் சவுபாக்கிய லட்சுமியின் அருளைப் பெற்று மகிழலாம்.

**ஸ்ரீசந்தானலட்சுமி:** எல்லா குழந்தைகளையும் தன் குழந்தையாக பாவிக்கும் தாய்மை உணர்வு எல்லோருக்கும் வேண் டும். தாயன்புடன் ஸ்ரீசந்தான லட்சுமியை துதித்தால் நிச்சயம் பலன் உண்டு.

**ஸ்ரீகாருண்யலட்சுமி:** எல்லா உயிர்களிடமும் கருணையோடு பழக வேண்டும், உயிர்வதை கூடாது, உயிர்களை அழிக்க நமக்கு உரிமை இல்லை, ஜீவ காருண்ய ஒழுக்கத்தை கடை பிடித்தால் ஸ்ரீ காருண்ய லட்சுமியின் அருளைப் பெறலாம்.



**ஸ்ரீமகாலட்சுமி:** நாம் நம்மால் முடிந்ததை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுமே நம் உள்ளத்தில் உதவ வேண்டும் என்ற எண்ணம் உறுதி யாக இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது. மேலும் ஸ்ரீ மகாலட்சுமி நம்மை பிறருக்கு கொடுத்து உதவும் படியாக நிறைந்த செல்வங்களை வழங்குவாள்.

**ஸ்ரீசக்திலட்சுமி:** எந்த வேலையும் என்னால் முடியாது என்ற சொல்லாமல் எதையும் சிந்தித்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்தால் ஸ்ரீசக்தி லட்சுமி நமக்கு என்றும் சக்தியைக் கொடுப்பாள்.

**ஸ்ரீசாந்திலட்சுமி:** நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து வாழ பழக வேண்டும். நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதை இருக்குமிடத்திலேயே நாம் சாந்தப்படுத்த முடியும். ஸ்ரீசாந்தி லட்சுமியை தியானம் செய்தால் எப்பொழுதும் நிம்மதியாக வாழலாம்.

**ஸ்ரீசாயாலட்சுமி:** நாம் சம்சார பந்தத்திலிருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல கடமையை செய்து பலனை எதிர்பாராமல் மனதை பக்தி மார்க்கத்தில் சாய்ந்து ஸ்ரீசாயாலட்சுமியை தியானித்து அருளைப் பெற வேண்டும்.

**ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமி:** எப்போதும் நாம் பக்தி வேட்கையுடன் இருக்க வேண்டும், பிறருக்கு உதவ வேண்டும், ஞானம் பெற வேண்டும், பிறவிப் பிணித் தீர வேண்டும் என்ற வேட்கையுடன் ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமியைத் துதித்து நலம் அடையலாம்.

**ஸ்ரீசாந்தலட்சுமி:** பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தார் பூமியை ஆள்வார். பொறுமையுடனிருந்தால் சாந்தலட்சுமியின் அருள் கிடைக்கும்.

**ஸ்ரீகிருத்திலட்சுமி:** நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், மனதை ஒரு நிலைப்படுத்தி நேர்த்தியுடன் செய்தால், புகழ் தானாக வரும். மேலும் ஸ்ரீகீர்த்தி லட்சுமியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

**ஸ்ரீவிஜயலட்சுமி:** விடாத முயற்சியும் உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால் நமக்கு எல்லா காரியங்களிலும் வெற்றி தான். ஸ்ரீவிஜயலட்சுமி எப்பொழுதும் நம்முடன் இருப்பாள்.

**ஸ்ரீஆரோக்கிய லட்சுமி:** நாம் நம் உடல் ஆரோக்கியத்தை கவனித்தால் மட்டும் போதாது, உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், கோபம், பொறுமை, காமம், பேராசை போன்ற நோய்க் கிருமிகள் நம் மனதில் புகுந்து விடாமல் இருக்க ஸ்ரீஆரோக்கிய லட்சுமியை வணங்க வேண்டும்.

# எதிர்பார்ப்புடன் மற்றும் எதிர்பார்ப்பில்லாமல்

## செய்யப்படும் ஆன்மீக பயிற்சி


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”



aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


### எதிர்பார்ப்புடன் செய்யப்படும் ஆன்மீக பயிற்சி (ஸகாம ஸாதனை):

இது உலகியல் ரீதியான எதிர்பார்ப்புடன் செய்யப்படும் ஸாதனை ஆகும். உதாரணத்திற்கு, கீழே கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக பிரார்த்தனை செய்தல், அர்ப்பணம் செய்தல், உபவாசம் இருத்தல் அல்லது சில சடங்குகளை செய்தல் :

- ❖ செல்வத்தை அடைய
- ❖ வேலை கிடைக்க
- ❖ தொலைந்த பொருள் திரும்பக் கிடைக்க
- ❖ மழலை செல்வம் வேண்டி
- ❖ வியாதியிலிருந்து நிவாரணம் பெற
- ❖ அன்பிற்குரிய ஒருவரின் நலனுக்காக

### எதிர்பார்ப்பில்லாமல் செய்யப்படும் ஆன்மீக பயிற்சி (நிஷ்காம ஸாதனை):

ஆன்மீக முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஆன்மீக பயிற்சி இதுவாகும். எனவே, இந்த வகையான ஆன்மீக பயிற்சியினால் ஸாதகர்கள் ஆன்மீக பயிற்சியை செய்து கொண்டே தங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட பயன்படுத்திக் கொள்வர். அவர்கள் வாழ்வில் ஏதாவது இன்னல்களை சந்திக்க நேரும்போது தங்களது அகம்பாவத்தை முற்றிலும் குறைத்து இறைவனின் சித்தத்தால் மட்டுமே தாங்கள் இந்த இக்கட்டிலிருந்து விடுபட முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் இறைவனிடம் சரணடைவதன் மூலம் அந்த கஷ்டமான சூழ்நிலையையே தங்களின் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட பயன்படுத்திக் கொள்வர்.

### ஸகாம மற்றும் நிஷ்காம வகை ஆன்மீக பயிற்சி ஒரு ஒப்பீடு

•நாம் ஆன்மீக பயிற்சி செய்வதால் குறிப்பிட்டளவு ஆன்மீக சக்திஉற்பத்தியாகிறது. இந்த ஆன்மீக சக்தியை ஸகாம வழியில் உலகரீதியான நலன்களை அடைவதில் செலவழிப்பதால் ஆன்மீக வளர்ச்சி எதுவும் ஏற்படுவதில்லை.

இது ஓட்டை உள்ள ஜாடியை நிரப்புவதற்கு ஒப்பாகும்; இந்த ஜாடி எப்பொழுதும் நிறையாது. மாறாக நிஷ்காம ஆன்மீக பயிற்சியினால் நமக்குக் கிடைக்கும் ஆன்மீக சக்தி முழுவதும் நமது ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட உதவுகிறது. இறைவனுடைய ஸாதகர் நிஷ்காம ஆன்மீக பயிற்சி செய்யும் பொழுது அவரது ஆன்மீக முன்னேற்றம் மட்டுமல்ல, உலக தேவைகளும் கவனிக்கப்படுகின்றன.

❖ ஸாதகர் ஸகாம ஆன்மீக பயிற்சி செய்வதன் மூலம் உலகரீதியான மகிழ்ச்சியையும் நிஷ்காம ஆன்மீக பயிற்சி செய்வதன் மூலம் ஆனந்தத்தையும் அனுபவிக்கின்றார். (படம்1)






(படம்1)

நிஷ்காம மற்றும் ஸகாம ஸாதனையில் உள்ள வேறுபாடு

நாம் ஸகாம ஆன்மீக பயிற்சி செய்யும்போது இறை தத்துவத்தின் காக்கும் தன்மையைத் செயல்பட வைக்கிறோம். நாம் எதை விரும்பி பிரார்த்தனை செய்கிறோமோ அதன் இறுதி பலன், ஆன்மீக பயிற்சியின் தீவிரத்தையும் நம் விதியையும் பொருத்தது.

நாம் நிஷ்காமஆன்மீக பயிற்சி செய்யும் போது நமது ஆன்மீக வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ள இறைவனின் கற்பிக்கும் தத்துவத்தை அல்லது குரு தத்துவத்தை செயல்பட வைக்கிறோம். அதோடு கூட இறைவனின் காக்கும் தன்மை யையும் செயல்பட வைக்கிறோம். ஒரு நிஷ்காம ஸாதகருக்கு ஏனையோரால் ஏதாவது இடைஞ்சலோ அல்லது துன்பமோ நேரிட்டால் அந்த சமயத்தில் இறைவனின் அழிக்கும் ரூபம் விழிப்படைந்து ஸாதகரைக் காத்து, அவருக்கு துன்பம் அளிக்கும் நபருக்கு உண்டான கூலியான தண்டனையையும் அளிக்கிறது.

ஸகாம ஆன்மீக பயிற்சி நிரந்தர பயனைத் தருவதில்லை. உதாரணமாக, ஒருவர் அதிக சொத்துக்களை அடைய வேண்டும் என்பதற் காக ஆன்மீக பயிற்சி செய்கிறார் என வைத்துக் கொள்வோம். அதை அடைந்த பிறகு அத்துடன் அவரது ஆசைகள் நின்று விடுவதில்லை.

நல்ல தேக ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, குழந்தைப்பேறு என்று அவரது ஆசைகள் தொடர்கின்றன. இவ்வாறாக தனது ஆசைகளின் சுழற்சி வலையில் சிக்கிக் கொள் கிறார்.

நிறைவேறாத இன்னும் பல ஆசைகள் உள்ளதால் ஆசைகளுக்கு முடிவே இல்லை. எனவே இது போன்ற ஆன் மீக பயிற்சி யால் ஒருவரால் முழுமையான திருப் தியை அடைய முடி யாது.

மாறாக நிஷ்காம ஆன்மீக பயிற்சி மூலம் ஒருவர் தன் வாழ்க்கை லட்சியமான ஆன் மீக முன்னேற்றத்தை அடைந்த பிறகு அவரால் அவரது உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்து இறைவனுடன் ஒன்ற முடிகிறது. ஆன்மீக வளர்ச்சியின் இந்நிலையில் அவரால் நிரந்தர அனுபவமான ஆனந்தத்தை தொடர்ந்து அனுபவிக்க முடிகிறது.

❖ ஸகாம ஆன்மீக பயிற்சி என்பது எல்லா படைப்புகளையும் படைக்கப்பட்ட பொருள் களையும் அனுபவிப்பது ஆகும்; நிஷ்காம ஆன்மீக பயிற்சி என்பது படைத்தவனை அனுபவிப்பதாகும். ஸகாம ஆன்மீக பயிற்சி என்பது மாயையிலிருந்து பொருட்களைப் பெறுவதாகும். நிஷ்காம ஆன்மீக பயிற்சி என்பது பரிபூரண சத்தியமான இறைவனை அனுபவிப்பது ஆகும்.

தகவல்: ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதி,
தொடர்பு : 9380949626



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# எந்த விதத்தில் முடியுமோ அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத் தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்





www.aanmeegamalar.com



# தகவல்கள்கள்

- அருப்புக்கோட்டை அருகிலுள்ளது திருச் சுழி என்ற ஊர். இங்குள்ள சிவன் கோயில் காணப்படும் நடராசர் பச்சிலை மூலிகையால் ஆனவர்.

- தஞ்சை அருகே தென்குடித் திட்டையிலுள்ள வசிஸ்டேஸ்வரர் ஆலய கருவறை விமானம் சந்திர காந்தக்கல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கல் சந்திரனிடமிருந்து கிரணங்களைப் பெற்று நீராக்கி, அதை 24 நிமிடங்களுக்கு ஒருமுறை மூல லிங்கத்தின்மீது வீழச் செய்து அபிஷேகம் செய்கிறது. நாம் சாதாரணமாக கோயில் உண்டியலில் பணம், ஆபரணங்களைத்தான் காணிக்கையாகப் போடுவோம். ஆனால், இலங்கை கதிர்காம முருகன் ஆலயத்தில் காணிக்கையாக காசோலை (செக்) எழுதிப் போடுகின்றனர்.

- உலகிலேயே மிகவும் உயரமான முருகன் சிலை மலேசியா நாட்டின் தலைநகரான கோலாம் பூரில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 140 அடி உயரம் கொண்ட சிலை இது. தமிழக சிற்பிகள் 15 பேர் சேர்ந்துதான் இச்சிலையை உருவாக்கினார்கள்.

- திருக்கண்ணமங்கை தலத்தில் உள்ள தாயார் சன்னதியில் இரு ஜன்னல்கள் உள்ளன. இதில் தேனீக்கள் கூடு கட்டுகின்றன. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை சூரியன் வலப் பக்கம் சஞ்சாரம் செய்யும் போது தேனீக்கள் வலப்புற ஜன்னலில் கூடு கட்டுகின்றன.

- ஆடி மாதம் புதுக்கோட்டை மாவட்டம், பரக்கலக் கோட்டை ஆவுடையார் கோயில் திங்கட்கிழமை மட்டுமே திறந்திருக்கும். நள்ளிரவு 12.00 மணிக்கு மட்டுமே வழிபாடு. பிற நாட்களில் கோயில் மூடியிருக்கும்.

- ராமநாதபுரத்திற்கு வடகிழக்கே பத்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள திருப்புல்லாணி ஆதிஜெகந்நாதப் பெருமாள் கோயிலில் உள்ள அரசமரம் விழுது விடுகிறது. அதன் விழுது நிலத்தில் படிந்து மரமாகி விட்டால் மூலமரம் பட்டுப் போய்விடுமாம். பிறகு புதிய மரம் வளர்ந்து விழுது விடுமாம். இப்படி ஓர் அதிசய அரசமரம் தலவிருட்சமாக பெருமை சேர்க்கிறது.

- திவ்யதேசமான திருவட்டாறில் சயனக் கோலத்திலுள்ள பெருமாளை மூன்று வாசல் வழியாக தரிசக்க வேண்டும். முதல் வாசலில் சிரசை தரிசிக்கலாம். இரண்டாவது வாசலில் சரீர தரிசனம் பெறலாம். மூன்றாவது வாசலில் பாத தரிசனம் பெறலாம். கேரள கோயில் என்பதால் கமகமக்கும் சந்தனத்தை அரைத்து பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். இங்குள்ள ஆறு வட்டமாக இருப்பதால் இவ்வூருக்கு திருவட்டாறு என்று பெயர்.

- மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் நடராஜர் சன்னதிக்கு வலப்புறம் குழந்தையை (முருகனை) இடுப்பில் ஏந்திய நிலையில் உள்ள பார்வதி அம்மனை தரிசிக்கலாம். இந்த அபூர்வக் காட்சி எங்கும் காணக் கிடைக்காதது.



Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



www.aanmeegamalar.com

# இலவச இதழ்

## ஆன்மிகமலர்
### மெயில் புக்










உங்களது மொபைல் போனில் படிக்க.....

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்